"MATHAR MARUMANAM."

மாதர் மறுமணம்



மலர் 3. இதழ் 2.

வெகுதானிய புரட்டாசி.

Annas 1½. 10 Cts.

"மாதர் மறுமணம்"

விற்பனை ஏஜெண்டுகள்.

1. இந்தியன் நாஷனல் நியூஸ் மார்ட், 89 சர்ச் ஸ்ட்ரீட் ஸ்லேவ் அயலண்ட், கொழும்பு.
2. நியூஸ் மார்ட் சப் ஏஜெண்ட், 8, 9 வார்ட் ஸ்ட்ரீட், கண்டி.
3. நவீன கதா புத்தகசாலை, மங்கமாரி வீதி, ரங்கூன்.
4. மு. முகம்மதலி, 208-A சிலிகி ரோடு, சிங்கப்பூர்.

"மாதர் மறுமணம்" சந்தா விபரம்.

வருஷ சந்தா இந்தியா, சிலோன் முதலிய உள்நாட்டுக்கு	...	ரூ. 1—0—0
பர்மா, மலாயா, சைகோன், தென்னாபிரிக்கா முதலிய வெளிநாட்டுக்கு	...	ரூ. 1—8—0
தனிப்பிரதி	... ...	ரூ. 0—1—6

வி. பி. மூலம் அனுப்ப இயலாது. முன்பணமாகவே செலுத்த வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் 2 ஷல்லிங் 6 பென்ஸ் அனுப்ப வேண்டும்.

விலாச மாறுதலுக்கு சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கடிதமெழுதவும். மாதிரிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

காரியதரிசி,

மாதர் மறுமண சகாய சங்கம், காரைக்குடி.

உள்ளுறை

ஒரு விதவையின் துயரம் (பாட்டு)	....	1
விதவா விவாகம் கடவுள் சம்மதம்	....	2
ஜீவன்லீலா—எஸ். சத்திய மூர்த்தி	....	5
எனது தமிழ்நாட்டுப் பெண்ணிளஞ் சிங்கங்களே! —காரைக்குடி முத்துக்கணபதி	....	16
மகளிர் இல்ல வாழ்த்துமணி —புதுவை R. S. ராஜலெக்ஷிமி	....	19
செருப்புக்கும் தடையா—ரமணன்	....	21
விமலநாதன்—பழ. மு. கண்டவராயன் பட்டி	....	23
ஹிந்து விதவா நிலையம்	....	29
விதவைகளின் துயர்—S. Sathiyamoorthy	....	38
நிகழ்ச்சிகள்	....	41

குமரன் புத்தகசாலை.

வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

மனம்போல வாழ்வு	0-8-0
திருக்குறள்(அறத்துப்பால்)	1-0 0
மெய்யறம்	0-8-0
சாந்திக்கு மார்க்கம்	0-8-0
அகமே புறம்	0-8-0
மெய்யறிவு	0-8-0

வ. வே. சு. ஐயர் எழுதியது.

சந்திரகுப்த சரித்திரம்	0-6-0

மகேசகுமார சர்மா எழுதியது.

வால்மீகி விஜயம்	0-12-0

இதர புத்தகங்கள்

ஞான வாசிட்ட மூலமும் உரையும் 2 பாகமும்	6-0-0
நைடதம் மூலமும் உரையும்	0-4-0
சிதம்பர ரகசியம்	0-8-0
உப்பள முற்றுகை	0-4-0
பக்தியோகம்	0-8-0
தேவோபாசன தீபம்	0-6-0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை (சீர்திருத்தக்கதை)	0-4-0
மநுநீதி மர்மம்	0-2-0
ரோமியோ ஜூலியட் (ஷேக்ஸ்பியர் நாடகக் கதை செய்யுள்)	0-4-0
இகபரஞானசாகரத் திரட்டு	0-6-0
பெரிய விக்கிரமாதித்தன் கதை	1-0-0
தாசிகள் மோச வலை (நாவல்)	1-4-0
நந்தனார் கீர்த்தனை	0-4-0
தோத்திரக்கோவை	0-6-0
இராமாயண ஆராய்ச்சி	0 4-0
சொர்னவல்லி	0-12-0
கூழைரங்கன்	0-12-0
அமிர்தவல்லிமாலை	0-4-0
நமது பலசரக்குக்கடை	0-6-0
நாயன்மார்	0-3-0
குட்டிச்சாத்தான் கட்டுரைகள்	0-3-0
பதிற்றுப்பத்தந்தாதி	0-3-0
மாதர் மறுமணம்	0-4-0
பத்மநாதன் அல்லது களவு போன வைரப்பதக்கம்	0-12-0
மானநஷ்ட வழக்கு	0-1-0
ஜீவகாருண்யத்திருக்குறள்	0-0.6
ஜீவகாருண்யப் பாடல் திரட்டு	0-3-0
சந்திரமதி அல்லது தற்காலத்து தமிழ் மகள்	0-2-0
கைம்பெண்ணின் கண்ணீர்	0-1-0
தேசீய கீதங்கள்	0-2-0
காசில்லாமல் உபதேசம்	0-1-0
பலதிரட்டு	0-1-0
கடவுளும் கோயிலும்	0-1-0
சமரச சன்மார்க்க தோத்திரத்திரட்டு	0-4-0
சைவசமய சாரம்	0-1-0
சுயராஜ்யம் யாருக்கு	0-1-0
மாதர் மறுமணம் பாடல் திரட்டு	0-2-0
அநியாயக் கல்யாணம்	0-0-6
இரண்டு கட்டுரைகள்	0-1-0
தமயந்தி நாவல்	0-8-0
சோதிடப் புரட்டு	0-2-0
சுயமரியாதைத் தாலாட்டு	0-2-0
புராண ஆபாசங்கள்	0-3-0
ராமலிங்க சுவாமி பாடல்	0-2-0
சுயமரியாதைத் தத்துவ கீதங்கள்	0-3-0
சுயமரியாதைப் பாடல்	0-2-0

மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.

சிவகுருநாதன்,
செந்தமிழ் நிலயம்.
கும்பகோணம்.

விதவை துயர்
ஒழிக்க வந்த வீரன்.

புனா மகளிர் கல்லூரிப் பேராசிரியர்

D. K. கர்வே.

மாதர் மறுமணம்.

பத்திராதிபர்:— மு. மரகதவல்லி.

மலர் 3	காரைக்குடி வெகுதானிய-ஸ்ரீ புரட்டாசிமீ	இதழ் 2

ஒரு விதவையின் துயரம்

(கோட்டாறு, எஸ். எம். கான்)

ஐயோ! நான் ஒருபாவி யாருமற்ற விதவை
மனமிரங்கி யருள்புரிவார் இவ்வுலகி லுண்டோ?
செல்வமதாய் பெற்றோர்கள் மணமுடித்து மகிழ்ந்தார்
சிறப்புடனே செல்வர்முகம் பார்த்துமகிழ்ந் திட்டேன்;
வையகத்தில் ஒருவருடம் இன்பமதில் திளைத்தோம்
வறுமையெனுங் கொடுவரக்க னிருவரையும் பிரித்தான்.
செப்பரிய மலர்மார்பில் கண்மலரைச் சாத்தி
விடைகொடுத்தேன் மலர்ப்பாதம் விழிநீராற் கழுவி 1.

ஊடுருவும் ஊசிவழி பின்தொடரும் நூல்போல்
போயினவே என்போதம் அவர்பின்னே யனைத்தும்
ஐயோ! நான் என்சொல்கேன்! துடிக்குதடீ மனமும்
பொருந்துமெங்கள் காதலிலே பொறுமையொடு நோக்கி
ஈராண்டு கழியுமுனம் அப்பாவி யமனும்
உயிரனைய காதலரின் உயிரினையே குடித்தான்;
அழகுபொழி திண்டோளன் ஆணழகன் மறைய
அச்சச்சோ அஸ்தமித்தான் இன்பஇளஞ் சூரியன் 2.

அன்புடைய பெற்றோரும் வயோதிகத்தில் மறைந்தார்
என்செய்வேன் பசியவொரு குழந்தையுட னய்யோ?
பிச்சையெடுத் துண்பதற்கோ பொருந்துதில்லை மனமும்
வேலைசெய்ய இயலவில்லை உடல்நலமு மில்லை

வெளுத்ததடி என்மேனி நோய்கள் வந்துசூழ்ந்து
பாலுக்காகக் கதறுதடி பசியஇளங் குழவி
சீதேவி என்றாலும் சிறப்புடனிங் கியார்
"கூலிவேலை செய்துபிழை அப்புறம்போ" என்பார் 3

கோவிலுக்கும் பூசைகட்கும் கொட்டிடுவார் கோடி
குருக்களுக்கும் கொழுத்தவர்க்கும் கொடுத்திடுவார் கூடி
அன்புதானே தெய்வமென்று அறைந்திடுவார் வெகுவாய்
அன்புடையார் யாருமில்லை அவனியிலே கண்டீர்!
தருமமென்று சாற்றிடுவார் வாய்வலிக்கக் கூறி
கையினாலே செய்தறியார் காசிலொன்று பாதி
ஏழைகட்கும் அதிதிகட்கும் யார்துணைவர் ஐயோ!
இன்பம் நிறை யிவ்வுலகு துன்பக்களஞ் சியமோ?

விதவா விவாகம் கடவுள் சம்மதம்.

(விதவ பந்து)

ஸ்வேதகேது ஒரு வித்வான். ஹிந்து சாஸ்திரங்களைக் கச டறக் கற்றறிந்தவர். அவர் வதவா விவாகப் பிரசாரத்தில் ஈடுபட்டுப் பலவிடங்களிலும் பிரசங்கங்கள் செய்து வந்தார். கூட்டங்களி லேயே யாருக்கேனும் சந்தேகங்களிருப்பின் வரவேற்றுத் தக்க ஆதாரங்களுடன் சமாதானம் கூறுவதில் நிபுணர்.

ஒருசமயம் ஒரு சாஸ்திரியுடன் இவ்விஷயம்பற்றி விவாதம் ஏற்பட்டது. அவர் கூறிய ஒவ்வொரு சந்தேகத்திற்கும் தகுந்த சமாதானங் கூறப்பட்டது. எல்லாம் அங்கீகரிக்கவேண்டியவைக ளாயின அவருக்கேற்பட்ட ஒரு சந்தேகம் பின் வருமாறு நிவர்த் திக்கப்பட்டது.

"விதவா விவாகம் பரமேஸ்வரனுடைய விருப்பத்திற்கு முரண்பாடான கார்யமாகும். ஒரு ஸ்திரி விதவையாகவேண்டு மென்று விதித்திருந்தாலொழிய அவள் ஏன் விதவையாகின்றாள்? விதவா விவாக சம்பந்தமாகத் தாங்கள் நடத்திவரும் பிரசாரங்க

ளெல்லாம் ஈஸ்வரனுடைய கட்டளைக்கு விரோதமானவை. உதாரணமாக இரண்டு மாதத்திற்கு முன்புதான் எங்கள் கிராமத்தில் ஒரு விதவா விவாகம் நடந்தது. ஆனால் அந்த ஸ்திரீயின் பதி மறுபடியும் இறந்துபோய்விட்டான். பாவம். அவள் மறுபடியும் விதவையாய் விட்டாள். ஈஸ்வரனுடைய கட்டளையை மீறுவதன் பலன் இது தான்" என்பது சாஸ்திரிகளின் சித்தாந்தம்.

வித்வான் ஸ்வேதகேது அவர்கள் கூறிய சமாதானம் பின் வருமாறு:—

தாங்கள் மிகக் கடினமான பிரச்னையைக் கிளப்பி விட்டதாகக் கருதுகின்றீர்களா? ஆனால் இந்த பிரச்னையைப் பலர்முன் தகர்த்தெறிந்திருக்கிறேன்: அவர்கள் மூச்சு பேச்சின்றி விதவா விவாகம் ஈஸ்வர சம்மதமற்றதென்ற கொள்கையைக் கைவிட்டு விட்டனர். இன்று அதே சந்தேகத்தைத்தான் நீங்களும் கேட்கின்றீர்கள். இதற்கு சமாதானம் பத்திரிகை மூலமாய்ப் பிரசுரித்து விடுகின்றேன். மற்றுமநேகருக்குப் பயன்பட ஹேதுவாயிருக்கும்.

நாம் செய்யும் கர்மங்களுக்கேற்றபடியே பலன்கள் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்பது முதுமொழி. முன் ஜென்மத்திற் செய்த பூஜாபலன்களுக்குத் தக்கவாறே இச்செனமத்தில் நாம் அனுபவிக்கின்றோம். ஆகையால் ஒரு விதவை பூர்வ கர்மத்தின் பலனாகவே வைதவ்ய தண்டனையை யடைகின்றாளென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் வைதவ்ய துக்கத்தைத் துடைக்க எந்த விதவையும் முயற்சி செய்யக் கூடாதென யார் துணிந்து கூறமுடியும்? நமது கர்மத்தின் பலனாக நமக்கேற்படும் ஆபத்துக்களைத் தீர்த்துக்கொள்ளப் பிரயத்தனம் செய்வது ஈஸ்வர கட்டளைக்கு விரோதமா? நாம் போய்க்கொண்டே யிருக்கிறோம். வழியில் இடறிக் கீழே விழுந்து விட்டால் எழுந்திருக்கக் கூடாதா? நமது வீடு இடிந்து விழுந்து விட்டதென வைத்துக் கொள்வோம். மறுபடியும் வீடு கட்டக்கூடாதா? வீட்டைப் புதுப்பிப்பதும் புதிதாக ஒரு வீடு கட்டத் தொடங்குவதும் ஈஸ்வராக்ஞைக்கும் கர்ம சித்தாந்தத்திற்கும் விரோதமான கொள்கையா?

ஜனங்கள் எவ்வளவோ வழக்குகளுடன் நியாயஸ்தலங்கட்கு செல்கின்றார்கள். முனிசீப் கோர்ட்டில் வழக்குத் தோற்றுவிட்டால் சப் கோர்ட்டின் உதவியை நாடுகின்றார்கள். அதிலும் தோற்றுவிட்டால் பிரிவி கௌன்ஸிலுக்கு முறையிடுகின்றார்கள். கீழ்க்கோர்ட்டில் கிடைத்த தீர்ப்பை கடவுள் அருளியதாகக் கொண்டு ஏன் திருப்தியடைவதில்லை? ஏன் மேல்கோர்ட்டுகளை நாடுகின்றனர்? இது ஈஸ்வர கட்டளைக்கு விரோதமா? தாங்கள் கூறுவதையே யெடுத்துக்கொள்வோம். உங்களுக்கு ஒரு வியாதி வந்துவிட்டது. கடவுளின் சங்கல்பத்தினால்தான் உங்களுக்கு வியாதிகண்டது. ஆகையால் மருந்து உட்கொள்வது ஈஸ்வர கட்டளையை மீறிய செயலல்லவா? அப்படியானால் மருந்துக் குப்பியை உடைத்து எறிந்துவிட வேண்டுமல்லவா? கர்மத்தின் பலனாகவே மனிதனுக்கு ஆயிரக்கணக்கான விபத்துகள் ஏற்படுகின்றன வென்பது சகலருமறிந்த உண்மை. அதற்கு விமோசனம் காண்பதே மனிதரின் கடமை. ஓர் விதவை தன் கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்ளும் நிமித்தம் புனர்விவாகம் செய்துகொண்டால் பகுத்தறிவுள்ள எவரும் அதை ஈஸ்வர சம்மதமற்ற செய்கையென்று துணிந்து கூறமாட்டார். விதவை எப்பொழுதும் துன்பத்திலாழ்ந்து கிடக்கவேண்டு மென்பதும் தன் துன்பத்தைத் தீர்க்க வழிதேடக் கூடாதென்பதும் கடவுளின் விருப்பமா? ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான விதவா விவாகங்கள் நடைபெறுகின்றன. ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் மரிக்கின்றனர். ஆனால், 'நமது ஸ்திரீயை இழக்க வேண்டுமென்பது நம் தலைவிதி; ஈஸ்வரானுக்கிரகம் நம் ஸ்திரீ இறந்தாள். இனிமேல் விவாகம் செய்துகொள்வதில்லை" யென்று எந்த ஆடவரும் இதுவரை கூறியதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் மறு விவாகம் செய்துகொள்ளத்தான் செய்கின்றார்கள். ஆடவர்கள் இரண்டாமுறை மூன்றாமுறை, நான்காமுறையாகக்கூட மறுவிவாகம் செய்துகொள்கின்றார்களே! இது ஈஸ்வர இச்சைக்கு முரண்பட்டதல்லவா?

லாகூரிலுள்ள "ஸர். கங்காராம் விதவாபவன"த்தின் முயற்சியால் ஆண்டுதோறும் சுமார் 3000 விதவா விவாகங்கள் நடை

பெறுகின்றன. விதவா விவாக தம்பதிகள் சுகமாயிருப்பதாகத் தகவல்கள் சகலரிடமிருந்தும் கிடைக்கின்றன. ஒன்றிரண்டு விதவா விவாகத்தில் யாராவது ஒருவர் இறந்து போய்விட்டால் விதவா விவாகம் செய்வது பாபமென்றுவது ஈஸ்வர சம்மதமற்ற தென்று வது அபிப்பிராயம் கொள்வது முற்றிலும் தவறு. விதவா விவாக பிரசாரத்தினுல் தினே தினே அபூர்வபலன் ஏற்பட்டு வருகின்றது ஹிந்து விதவைகள் மதமாற்றத்தினின்றும் தீயவொழுக்கங்களி னின்றும் பிராணத்தியாகத்தினின்றும் காப்பாற்றப்படுகின்றூர் கள். இவ்வாறிருக்க விதவா விவாகம் தெய்வ சம்மதமற்றதெனப் புகல்வது பெருத்த அநியாயம்; விவேகமற்ற வார்த்தையாகும். விவேகமுள்ள ஒவ்வொரு ஹிந்துவும் விதவாவிவாகப்பிரசாரத்தில் பங்கெடுத்துக்கொண்டு துன்பத்திலாழ்ந்த விதவைகளின் துக்க த்தை துடைக்கத் தம்மாலியன்ற உதவிபுரிவதைக் கடமையாகக் கொள்ளவேண்டும்.

வி. ப.

ஜீவன் லீலா

(S. சத்யமூர்த்தி.)

மாதவனுடைய முதல் மனைவி ஸௌதாமினி இறந்ததும் அவர் புனர்விவாகம் செய்து கொண்டார். ஸௌதாமினிக்கு நான்கு பெண்களும் ஒரு பிள்ளையும் எல்லோரிலும் இளையவள் லீலாதான். லீலா நல்ல ஸௌந்தரிய ரூபலாவண்ய முள்ளவள். குயி லினுமினிய சாரீரமும் பவளச்செவ்வாயும், வில்லொத்த புருவங்க ளும், சேல்விழிகளும், அன்னநடையும், மின்னிடையும் பார்ப் போர் மனதைக் கவர்ந்தன.

மாதவன் தன் நான்கு புத்திரிகளையும் உயர்தரக் கலாசாலை யில் வித்தைகற்க ஏற்பாடு செய்திருந்தார். மறுவிவாகம் நடந்து ஆறுண்டுகள் கடந்தன. இளைய மனைவி கலாதேவிக்கு ஒரு பால கனும் ஒரு பெண்மகவும் பிறந்தன. அக்குழந்தைகளை மாதவன் மிகுந்த வாத்ஸல்யத்துடன் நாளொரு மேனியும் பொழுதொரு

வண்ணமுமாய் வளர்த்துவந்தார். முதல் மனைவியின் குழந்தைகள் யௌவனப் பருவமடைந்தும் அவர்களுடைய விவாகத்தைப் பற்றிய சிந்தனையே சிறிதும் இல்லாதிருந்தார். மாதவனுக்கு ஒரு ஸகோதரி யுண்டு. பெண்களின் விவாக சம்பந்தமாக அடிக்கடி சகோதரனிடம் ஞாபகப்படுத்தி வந்தாளெனினும் மாதவன் சிறிதும் லக்ஷியம் செய்யாது அசிரத்தையாயிருந்தார். இதில் அவருடைய குற்றமொன்று மில்லை. அவர் இரும்புப் பெட்டித் தொழிற்சாலை நடத்திவந்தார். பணம் தாராளமாயிருந்த காலத்திலெல்லாம் தம் பொருள்களைக் காப்பாற்ற இரும்புப் பெட்டிகள் வாங்கிவந்தார்கள். ஆனால் நாட்டில் வறுமைமிருந்து பணப்பஞ்சம் எற்படவே ஜனங்கள் குட்டு வெளிப்படாமல் பூர்வஸ்திதியின் போர்வையைப் போர்த்துக்கொண்டு காலங்கழித்து வந்தார்கள். இப்படிப்பட்ட மந்தமான சமயத்தில் இரும்புப்பெட்டி வியாபாரத்திற் கிடமேது? பாவம்! மாதவன் கையைக் கட்டிக்கொண்டு பெருத்த ஆலோசனையில் மூழ்கியிருந்தார். ஆனால் அவருக்குப் பெண் கல்வி வளர்ச்சியில் சிரத்தை அதிகமுண்டு. பொது நலத்தில் விருப்பமுள்ளவர் புத்திரிகளி லிரண்டொருவருக்கு கலாசாலையில் அவர்களுடைய விசேஷக் கல்வியறிவின் காரணமாக உபகாரச் சம்பளமும் கிடைத்துவந்தது. மிகுந்த சிரமத்துடன் குடும்ப நிர்வாகம் நடந்து வந்தது.

ஃ ஃ ஃ

ஜீவன் பால்மணம் மாறாத பாலகன். இப்பரந்தவுலகில் கொழு கொம்பில்லாத கொடியேபோல் தத்தளிக்கும்படியாக அவனுடைய தாய் தந்தையரிருவருமே மண்ணுலகை நீத்தனர். தாயையாவது ஜீவன் ஏழாண்டுகள் வரை பார்த்திருந்தான். ஆனால் தந்தையைப் பார்க்கும் பாக்யங் கூட அவனுக்கில்லை. காரணம் தகப்பன் இறக்கும்போது அவன் தாயின் கர்ப்பத்தில் வாசம்செய்து கொண்டிருந்தான். அன்னை அந்திய காலத்தில் தன் சிற்றப்பன் வீட்டில் வசித்துவந்தாள். "சித்தப்பா! நான் என் இன்னுயிர்ச் செல்வத்தைத் தங்களிடம் ஒப்புவிக்கின்றேன். இவனை ரக்ஷிப்பது தங்கள் கடன்" எனக் கூறிப் பூவுலக யாத்திரையை முடித்துக் கொண்டாள். அது முதல் ஜீவன் தன் அன்னையின் சிற்றப்பன் வீட்டில் வளர்ந்துவந்தான். அதே தெருவில்தான் மாதவனும் வசித்து வந்தார். இரு

குடும்பத்தாரும் அன்யோன்யமாகப் பழகிவந்தார்கள். பள்ளிக் கூடம் முடிந்தவுடன் ஓய்வு நேரங்களிலெல்லாம் ஜீவன், மாதவன் வீட்டிற்குப் படிக்கச் செல்வது வழக்கம். அது சமயம் லீலா ஸ்திரீ கலாசாலேயில் 5-ம் வகுப்பில் படித்துவந்தாள். ஜீவன் 4-ம் வகுப் பில் மாணவனுயிருந்தான். இருவரும் ஓடியாடித் திரிந்து விளே யாடுவது சகஜமாயிற்று. இருவர்களிடையேயும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. லீலாவோ பள்ளிக்கூடம் விட்டதும் மணிக்கூண் டுக்கருகில் ஜீவனின் வருகையைத் தினமும் எதிர்பார்த்திருந்து சேர்ந்தே வீடுசேருவது வழக்கம். அஸாதாரணமாய் என்ருவது ஜீவன் வரத்தாமதித்தால் லீலா மிகுந்த துயரத்துடன் வீட்டைய டைந்து ஜன்னலருகில் வீற்றிருந்தவண்ணம் ஜீவனே எதிர்பார்த்தி ருப்பாள். ஒருநாள் ஜீவன் தன் இல்லத்திற்கு வரத்தவறினுலும் தன் அத்தையிடம் சென்று "இன்று ஜீவன் ஏன் வரவில்லே?" என்று கேட்பாள். ஜீவனேப் பிரிந்திருக்கும் ஒவ்வோர் நிமிஷமும் அவளுக்கு ஒரு யுகமாகத் தோன்றும். ஜீவனேக் கண்டதும் அவளுக்கு எல்லேயற்ற விவரிக்கொணுத ஆனந்தம் ஏற் படும். இழந்துபோன விலேயுயர்ந்த வஸ்துவை மறுபடி யடைந் ததேபோல் சந்தோஷத்தில் தன்னேயும் மறந்து களிநடனம் புரி வாள். படிகளேக் கடந்து உள்ளே வரும்வரை அவளால் காத்திருக்க முடியாது. தானே சில படிகள் இறங்கிச் சென்று கையைப்பற்றி இழுத்துச் செல்லுவாள். ஜீவனே ஆனந்தபரவசமடைந்து "அடெ பைத்தியமே! மெதுவாக! இடறி விழுந்துவிட்டால்!" என்று சிரித் துக்கொண்டே எச்சரிக்கை செய்வான். "ஜீவன்! இன்று வர இவ் வளவு தாமதமாய்விட்டதே!" என்று குயிலினிமைவாய்ந்த குரலில் கூறுவாள். ஜிவன் சீக்கிரம் வந்துவிட்டாலும் சரி அவள் "தாமத மாய் விட்டதே!" என்ற மனக் குறையை வெளியிட ஒரு நாளும் பின் வாங்கியதில்லே. நாள் தவருமல் இக்குறைதான் அவளேத் துன்புறுத்தும். அதற்குப் பதிலாக ஜீவன் சொல்லும் மறுமொழி யும் ஒன்றேதான்—"என்ன செய்வேன்? அம்மா சில வேலேயின் நிமித்தம் ஓரிடத்திற்கு அனுப்பினுள்"—ஒரு நாள் லீலா, "ஜீவன்! தினசரி அம்மா வேலேயாய் அனுப்பினுள் என்றே காரணம் கூறு கின்ருயே" என்று வினவவே, ஜீவன் சிரித்துக்கொண்டே "நீயும்

தினந்தோறும் அதே கேள்வியைத்தான் கேட்கிறாய். நான் என்ன செய்வது?" என்று விடை பகர்ந்தான். லீலாவும் முகத்தைச் சுளித்துக்கொண்டே, "அப்படியானால் இனி உன்னிடம் இக்கேள்வியைக் கேட்கவில்லை" என்று மறுமொழி பகர்ந்தாள். ஆனால் ஜீவன் வந்ததும் தன்னையும் மறந்து, "ஜீவன்! இன்று வெகுநேரம் தாமதித்து வந்தாய்" என்று கேட்கத் தவறிய நாளே யில்லை. ஜீவனும் வேடிக்கையாகச் சிரித்துக்கொண்டே, "லீலா! அம்மா சில காரியத்தின் நிமித்தம் அனுப்பியிருந்தாள். என்ன செய்வேன்?" என்ற பழய பாடத்தைப் படிப்பது பிரதி தினமும் நிகழும் சம்பவம்.

சந்தியாகாலம். தினமணி மலை வாயில் விழுந்துகொண்டிருந்தான். மேற்றிசை வானம் கதிரவனின் செங்கிரணங்களால் பொன்னிறமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. பக்ஷியினங்கள் இரவு சமீபிப்பதையறிந்து தத்தம் கூடுகளை நோக்கிப் பறந்தன. லீலாவும் ஜீவனும் வழக்கம்போல் மேல் மாடியில் பந்தாடிக்கொண்டிருந்தார்கள். தெருவில் ஓர் விவாக ஊர்வலம் வந்துகொண்டிருப்பதை வாத்ய கோஷங்கள் பால நண்பர்களுக் கறிவித்தன. இருவரும் பந்தாட்டத்தை நிறுத்திவிட்டு வீட்டின் தலைவாயிலையடைந்து ஊர்வலத்தைப் பார்ப்பதிலீடுபட்டார்கள். லீலா விஷய ஆராய்ச்சியில் மிகுந்த நாட்டமுடையவள். எந்த விஷயமாயினும் கவனமாய்க் கேட்டு அதைக் குறித்து ஆராய்ச்சியிலீடுபடுவாள். கலாசாலையின் புத்தகாலயம் அவளுக்கு அநேக புத்தகங்களைக் கொடுத்துதவியது. வீட்டிலும் தன் சகோதரிகள் சிறு சிறு குழந்தைகளின் விவாக வரலாறுகளைப் பற்றிச் சொல்லக் கேட்டிருக்கிறாள். பெண்ணும் மாப்பிள்ளையும் மிகச் சிறியவர்களாயிருப்பதைக் கண்டாள். மாப்பிள்ளைக்கு சுமார் ஏழு அல்லது எட்டு வயதே யிருக்கலாம். பெண்ணுக்கு நான்கே வயதிருக்கலாம். பெண்ணை அதன் தாய் இடுப்பில் தூக்கிச் சென்றுகொண்டிருந்தாள். மாப்பிள்ளையோ தன் தாயின் கையைப் பிடித்துக்கொண்டு சென்றுகொண்டிருந்தான். ஊர்வலம் இவர்களைக் கடந்து சென்றதும் "ஜீவன்! இவ்வளவு சிறிய வயதில் ஜனங்கள் விவாகம் செய்துவிடுகின்றார்கள். பின்னால் ஏற்படும் பலாபலன்களைக் குறித்துச் சிறிதும் சிந்திப்பதில்லை. குருட்டுத்தனமாய் கிணற்றில் தள்ளுவதுபோல் செய்துவிடுகின்றார்கள். இதனு

லேயே நமது சமூகம், தேசம், நாகரிகம், முன்னேற்றம் எல்லாம் பாழடைகின்றன. இவ்வளவு சிறு வயதிலே மணமுடிக்கின்றூர் களே, ஏதாவது வியாதி யேற்பட்டு ஒருவ ரிறந்துவிட்டா லென்ன செய்வது? இதையும் மிஞ்சி இவர்கள் க்ஷேமமாகவே இருந்தா லும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் நெடுநாள் ஜீவிப்ப தில்லை. அஞ்ஞானத்தினுல் இவர்கள் வெகு சீக்கிரத்திலேயே தம் விலையுயர்ந்த வாழ்நாட்களை வீணுக்கிக் கொள்கின்றூர்கள்", என்று லீலா தன் விசால அறிவின் தன்மையை வெளியிட்டாள். ஆனுல் ஜீவன் லீலாவைப்போல் அவ்வளவு விவேகமும் கல்வியும் இன்னும் பெறவில்லை. எனவே லீலா கூறும் விஷயங்கள் அவன் மூளைக்கெட்டவில்லை. இன்னும் அவனுடைய மனது குழந்தையி னுடையதாகவே யிருந்தது. லீலா கூறிய விஷயங்கள் அவ னுக்கு ரஸிக்கவில்லை. அவன் லீலாவின் பேச்சுகள் முடியும்வரை பொறுமையுடனிருந்து விட்டு "லீலா! வா விளையாடலாம்" என் ருன். லீலா மிகவும் களைப்படைந்திருந்தபடியால், "ஜீவன்! நான் களைத்துப் போய்விட்டேன். இனி நான் விளையாட முடியாது" என்று சொன்னுள். "பாதியாட்டத்தில் விளையாட்டை விட்டு எப்படிப் போகலாம்? நான் உன்மேல் வைத்திருக்கும் இரண்டு பழத்தையும் கழித்துவிடு" என்ருன் ஜீவன். லீலாவோ மிகுந்த வருத்தத்துடன் தன் காலில் உள்ள காயத்தைக் காட்டி, "பார், கால் இடரிக்கொண்டு விட்டேன். ரத்தம் வருகின்ற" தென்று கூறினுள். உடனே ஜீவன் "போனுல் போகிறது" என்று கூறி விட்டு காயத்தைக் கட்டுவதிலீடுபட்டான். இருவர்களுடைய விளையாட்டின் அந்தியகாலமும் முடிந்தது.

ஃ ஃ ஃ

நாட்கள் பறந்தன. மாதங்கள் கடந்தன. ஆண்டுகள் நழு வின. ஜீவன் பிரதாபக் கல்லூரியில் ஆசிரியரானுன். அவன் ஆருவது வகுப்பு பயிலும் பொழுதே லீலாவின் வீட்டிற்கு வரு வதை நிறுத்திவிட்டான். ஆனுல் அம்மா சில வேலைகளின் நிமித்தமாக அனுப்பும் பொழுது செல்லநேரும். அவன் வீட் டிற்கு வரும்பொழுது லீலா இருந்தால் தான்எந்த வேலையைச் செய்துகொண்டிருந்தாலும் அப்படியே விட்டுவிட்டு இமை கொட் டாமல் ஜீவனைப் பார்த்துக் கொண்டிருப்பாள். தற்செயலாய்

அவர்கள் கண்கள் சந்தித்துவிட்டால் லீலாவின் பார்மையினால் தான் ஜீவனிடம் ஏதோ சொல்ல விரும்புவதாக வெளியாகும். பெரியவர்களாகி விட்டபடியால் அவர்களிருவரும் சம்பாஷிப்ப தற்கு கூச்சப்பட்டார்கள்.

மாதவன் தாய்வீடு சென்றிருந்த தன் மனைவி கலாதேவியை அழைத்து வருவதற்காகச் சென்றார். ஆனால் கொடிய வெப்பு நோய்வாய்ப்பட்டு (Sunstroke)ஹரித்துவாரத்தில் காலகதியானார். கலாதேவி தன் குழந்தைகளுடன் பிறந்தகம் சென்றுவிட்டாள். மாதவனுடைய சகோதரியும் பஞ்சாபுக்குச் சென்றுவிட்டாள். குடும்பக்கடன் எல்லை கடந்து விட்டது. சாமான்களெல்லாம் ஏலம் போடப்பட்டு விட்டன. வீட்டில் ஆடவர் எவருமில்லை. நான்கு பெண்கள்தான் வீட்டில்பாக்கி. அவர்களும் கலாசாலையைச் சேர்ந்த போஜன விடுதிக்கு வந்துவிட்டார்கள். சிலவு அதிகம் பிடித்தது. எனினும் ஒருவிதமாய் நிர்வாகம் நடந்துவந்தது. இரண்டு வருஷங்கள் சென்றன. லீலா பெண்கள் கலாசாலையில் 45 ரூபாய் சம்பளத்தில் உபாத்தியாயினியாக வேலையிலமர்ந்தாள். மூத்த சகோதரி கல்லூரியில் எம். ஏ. பரிட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தாள். அவளுடையசிலவுகளும் லீலாவின் தலையில் சுமந்தன. முகத்தில் துன்பம் குடிகொண்டது. சிற்சில சமயங்களில் ஜீவனுடைய தாய் அவளைப் பார்த்துவிட்டு வருவாள். தாயின் மூலம் லீலாவின் வரலாற்றையும் அவள் துன்பத்தையும் கேட்கவே ஜீவனுக்கு லீலாவைப் பார்க்க ஆவல்கொண்டான். அன்றிரவு அவனுக்குச் சிறிதும் நித்திரை கொள்ளவில்லை. "நாளை சென்று லீலாவிடம் என்ன சொல்வது?" என்ற பிரச்னை அவனை குழப்பத்திலாழ்த்த முடிவில் ஒரு தீர்மானமும் செய்து கொண்டான்.

அதிகாலையில் ஜீவன் 'ட்யூஷனு'க்குப் புறப்பட்டான். அன்று லீலாவைப் போய்ப்பார்த்துவிட்டு வரவேண்டுமென்று தன் தாயினிடம் தெரிவித்தான். கலாசாலையில் அன்று 'லீவு' எடுத்துக் கொண்டான். போஜனம் தயார் செய்யச் சொல்லிவிட்டு 'ட்யூஷனுக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கும் மனக்குழப்பம் அவனை விட்டகல்வதாயில்லை. கற்பிப்பதில் மனம் செல்லவில்லை. மனக்குழப்பத்துடன் மாணவனிடம் "இன்று பாக்கியுள்ளதை

நாளைக்கு முடித்துவிடலாம். அடையாளம் செய்துவை" என்று கூறிவிட்டு எழுந்திருந்தான். ஆனால் அன்று வீட்டிலேயே தங்கியிருந்த மாணவனின் பிதா ஜீவனுக்குப் பின்புறம் உட்கார்ந்து அவனுடைய நிலையை யூகித்தறிந்து கொண்டார். "தாங்கள் இன்று மனக்கவலையா யிருப்பதாகத் தெரிகின்றது. காரணமென்ன" வென்று வினவினர். ஜீவன்பொய்ச் சிரிப்புடன், இன்று கொஞ்சம் வேலையிருக்கின்றது. ஆகையால் சீக்கிரம் செல்லவேண்டியிருக்கின்றது" என்றுமட்டும் சொல்லி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

சூரியன் உச்சியையடைந்து விட்டது. ஜீவன் வேகமாய் நடந்து சென்று கொண்டிருந்தான். எங்கு சென்று கொண்டிருக்கிறோமென்று அவனுக்கே தெரியாது. முடிவில் ஜன நடமாட்டமற்ற ஓரிடத்தை யடைந்தான். சற்று நின்று சுற்றிலும் பார்க்கவே ஒரு கிராமத்தின் சமீபத்திலிருக்கக் கண்டான். அவ்வழியே சென்று கொண்டிருந்த வொருபாட்டைசாரியை நோக்கி "காசி இன்னும் எவ்வளவு தூரமிருக்கின்ற"தென்று கேட்டான். வழிப்போக்கன் திரும்பி, "இன்னும் பட்டணம் நாலுமைல் இருக்கின்ற" தென்று கூறிவிட்டு நடந்தான். ஜீவன் திடுக்கிட்டுப் போனன். இனி மெதுவாய்ச் சென்று கொண்டிருந்தால் உசிதமல்லவெனத் தீர்மானித்து ஓட ஆரம்பித்தான். கால்கள் சளைத்தன. எனினும் பொருட்படுத்தாது ஓடிச் சென்று லீலா வேலைபார்த்து வந்த பெண்பாடசாலையை யடைந்தான். அங்கு நின்று கொண்டிருந்த ஒரு ஸ்திரீ யாரைச் சந்திக்கவேண்டு மென்று வினவவே, "உபாத்தியாயினி லீலாவதியைப் பார்க்க வேண்டு" மென்று தெரிவித்தான். ஜீவனை அங்கிருந்த நாற்காலியில் அமர்த்திவிட்டு வேலைக்காரி சென்று சிறிது நேரத்தில் ஓர் சீட்டுடன் திரும்பிவந்தாள். அதில் லீலாவதியவர்கள் 9-ம் வகுப்பில்சரித்திரம்கற்பித்துக் கொண்டிருப்பார்கள். போய்ச்சந்திக்கலா"மென்று எழுதித்தலைமை உபாத்தியாயினியின் கையொப்பமிட்டிருந்தது. ஜீவன் வேலைக்காரியுடன் சென்று 9ம் வகுப்பை யடைந்தான். வேலைக்காரி வகுப்பிற் சென்று ஒரு கனவான் பார்க்க வந்திருப்பதாக லீலாவிடம் தெரிவித்தாள். லீலா வெளியில் வந்தாள். ஜீவனைப் பார்க்கவே

"யார்! ஜீவன்!" என்று கூவினள். "ஆம் லீலா" என்ருன் ஜீவன், லீலாவின் இதயம் நடுங்கிற்று. கண்கள் நீருதிர்த்தன. ஜீவனுக்கு நாவெழவில்லை. லீலா தன் இளைப்பாறு மறைக்கு இட்டுச் சென்ருள். வேலைக்காரியோ அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். இருவரும் அறையை அடைந்ததும் கதவை மூடிக்கொண்டார்கள். லீலாவின் கண்கள் தாரை தாரையாய் நீரைப் பெருக்கின. ஜீவன் தன் கண்ணீரை வெளியே விடாமல் எவ்வளவோ தடுத்துப் பார்த்தான். சாத்யமில்லை. மளமளவென்று கண்ணீர் பெருகின. விண்மாரி யெனக் கண்மாரி பெய்து வெகுநாளாகப் பிரிந்த நண்பர்கள் முதன் முறையாகச் சந்தித்தார்கள்.

பின்பு ஒருவாறு ஜீவன் சாந்தமடைந்தவனுய், "லீலா நான் உன் நிலைமையை நன்ருயறிவேன். செலவுகள் அதிகரித்து மிகவும் சிரமப்படுகின்ருயென்று அறிகின்றேன். மிகவும் இளைத்துத் துரும்பாய்ப் போய்விட்டாயே" என்ருன். லீலா மிகுந்த சிரமத்துடன் பொய்ச் சிரிப்பை வருவித்துக்கொண்டு "அவ்வாருென்றுமில்லையே" யென்று சொன்ஞள். ஆனல் அவளுடைய சொற்களில் அவளுக்கே திருப்தியில்லை யென்பதை அவளுடைய கண்கள் நீரைப் பெருக்கி வெளியிட்டன. லீலா! நீ விவாகம் செய்துகொண்டுவிட்டால் நிலைமை சீர்பட்டுவிடுமென்று கருதுகின்றேன்" என்ருன் ஜீவன். 'விவாகமா! ஜீவன்! அது ஒரு பெருந் தொல்லையல்லவா! இதில் மாட்டிக்கொள்பவர் தன் சுதந்திரத்தை இழந்து பரதவிக்கின்ருர்கள். மேலும் பிறருக்கு ஆதரவாயுள்ள ஒருவர் விவாகம் செய்துகொண்டு விட்டால் அவரைச் சார்ந்துள்ளவர்களுடைய கதி யென்னவாகு மென்று உனக்குத் தெரியாதா?" என்ருள் லீலா. "லீலா! நீ சிறு குழந்தையல்ல. ஒரு ஜீவனுக்கு உதவவேண்டியதவசியமென்று நீ உணரவில்லையா? விவாகமின்றி யாரிருக்கிருர்கள். உலகத்தி லுதித்தவர்க ளெல்லோரும் இவ்வில்லறத்தில் அகப்பட்டுக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. நீ ஒரு பெரிய யோகியல்லவே. யோகிகள்கூட நிலையினின்று பிறழ்ந்து போகின்ருர்கள். அவ்வாருக உன்னையும் என்னையும் போன்றவர்களைப் பற்றிக் கேட்பானேன். விவாகம் ஒரு தொல்லையென்று கூறுகின்ருய். ஆனல் அது தொல்லையே யில்லை. இப் பந்தனத்தின் மூலம் ஜீவர்கள் தம்மா

வியன்றவரை தத்தம் கடமையைச் செய்ய சாதகமான ஓர் தெய்வீக சாதனமேயாகும். எவரொருவர் இந்திரிய போகங்களால் சந்தோஷ மடையாமலும் சுகதுக்கங்களை உயரியவழியில் அனுபவிக்காமலும் இயற்கைக்கு விரோதமாய் நடந்துகொள்கிறார்களோ அவர் ஒருநாள் ஏமாற்றமடைவது நிச்சயம். உன் சகோதரிகளும் விவாகம் செய்துகொள்வார்களானால் பல கஷ்டங்களினின்றும் விடுபட்டு அவர்களுடைய நிலைமையும் சீர்படும்." என்று அன்புடன் சொன்னான் ஜீவன்.

"ஜீவன்! என்னவாயினும் சரியே. நான் என்பிதாவின் கட்டளையை மீறி நடக்கச் சக்தியற்றவளா யிருக்கின்றேன்."

"அப்படியானாலென்ன! உன் பிதா தான் உன்னை விவாகம் செய்துகொள்ளவேண்டா மென்று எச்சரித்தாரா?"

"ஆம் என் தந்தையே. என் விருப்பமும் அதுவேயாகும். என் சகோதரி கூட ஸ்வதந்திர வாழ்வையே சிலாக்கியமெனக் கருதுகின்றாள்."

"லீலா! நீ இன்னும் ஆலோசனைகளில் மிதந்து கொண்டிருக்கிறாயே தவிர ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் கவனிக்கத் தவறிவிட்டாய். மரியாதையான வாழ்க்கையைக் காட்டிலும் வெளிப்பகட்டான சுதந்திரம் மிகக் கேடாகவே முடியும். பின்னால் செல்லச் செல்ல இத்தகைய சுதந்திரம் தற்கால ஸ்திரீ சமூகத்தை எவ்வளவு தூரம் பாதிக்கப் போகின்றதென்பதை நீயே அறிந்துகொள்வாய். நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன். இனி உன்யுக்தம் போல் செய். ஆனால் ஒன்றுமட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள். மனிதன் ஒரு உண்மையான ஆலோசனை யாளருடைய உதவியின்றித் தனிமையாகவே இவ்வுலகில் மேன்மையடைவது துர்லபம்."

லீலா, ஜீவன் இருவருடைய கண்களும் சந்தித்தன. கண்களில் அன்பு ஊற்றுப் பெருக்கெடுத்தோடிற்று.

ஃ ஃ ஃ

ஜீவன் லீலாவைச் சந்தித்ததிலிருந்து மாறுதலடைந்தான். தன் வாழ்நாட்களை தேச கைங்கர்யங்களில் ஈடுபடுத்தினான். எங்காவது ஏழை யெளியவர்கள் கஷ்டப்படுகின்றார்களெனத் தெரிந்தால்

'லீவு' எடுத்துக் கொண்டு அவர்கட்கு உதவிபுரியச் சென்றுவிடு வான். முடிவில் உபாத்தியாயர் வேலையையும் உதறித் தள்ளினன். கிராமப் புனருத்தாரண வேலையிலீடுபட்டான். அடிக்கடி கிராமங் களில் சுற்றுப்பிரயாணம் செய்து சாத்யமானவரை ஜனங்களுக்கு நல்வழியைப் போதித்து வந்தான். சிற்சில சமயங்களில் நாலைந்து நாட்கள்வரை வீட்டுப்பக்கமே எட்டிப்பார்க்க மாட்டான். கிரா மத்தில் "பிளேக்" பரவிவிட்டது. ஜனங்கள் வெளியேறிச் சென்று கொண்டிருந்தனர். வீடுகளில் பிணங்கள் கவனிப்பா ரின்றிக் கிடந்தன. அருகில் எவரும் செல்ல அஞ்சுகின்றூர்கள். இத்தகைய ஆபத்தான நிலைமையில் ஜீவன் தனிமையாகவே சவங் களைத் தன் தோள்களிலெடுத்துச்சென்று நதிக்கரையில் தகனம் செய்வான்.

ஃ ஃ ஃ

ஜீவன் இரண்டுமாத காலமாகப் படுத்த படுக்கையா யிருக் கின்றான். உடல் நலம் மிகச் சீர்கெட்டிருந்தது. கிராமத்தி லுள்ள ஆடவர் பெண்டிர் சகலரும் ஜீவனின் படுக்கையருகில் கூடி யிருந்தனர். டாக்டர் பிழைப்பதரிதென்று கைவிட்டு விட்டார். ஜீவன் உருவில்லாமல், "அம்மா லீ........லா........வை........அழை.... ப்பி....யு........ங்........கள்" என்றான். வளர்ப்புத்தாய், "குழந் தாய்! ஆள் அனுப்பியிருக்கின்றேன். அதைரியப்படாதே" என்று கண்ணீரைத் துடைத்துத் தலையில் தடவிக்கொண்டே கூறினாள்.

"அம்மா! நா........ன்........இனி...........பிழை........க்க........ மாட்........டே........ன்".

"குழந்தாய்! அப்படிச் சொல்லாதே. கடவுள் ஸொஸ்த மாக்கிவிடுவார்."

காலச் சக்கரத்திலகப்பட்டுக் கொண்டு லீலா பல விநோதக் காட்சிகளைக் கண்ணுற்றாள். மூத்த சகோதரி போனவிடந் தெரியவில்லை. அடுத்த சகோதரி 'பிரகாசம்' என்ற ஒருவனுடன் வெளிக்கிளம்பிவிட்டாள். மற்றொருவள் விலைமகள் வாழ்க்கையிலீடு பட்டாள். இக்காட்சிகள் லீலாவின் கண்களைத் திறந்துவிட்டன. அவள் வாழ்க்கை மாறுதலடைந்தது. லீலாவை அழைத்துவரச் சென்றவன் அறையில் நுழைந்தான்.

படுக்கையில் வியாதியாய்ப் படுத்திருக்கின்றாள் லீலா. தாதி மருந்துப் புட்டியிலிருந்து ஒரு கண்டிப் பாத்திரத்தில் மருந்தை ஊற்றிக் கொண்டிருக்கிறாள். லீலா அவனைப்பார்த்து, "நீ ஜீவனிடத்திலிருந்தாவருகின்றாய்?" என்று கேட்டாள். அவன் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே "ஆம், உங்களை அழைத்து வரும் படியனுப்பினார். அவர் பிழைப்பதரிது" என்றான்.

இவ்வார்த்தைகள் லீலாவின் இதயத்தைப் பிளந்தன. அவள் மிகத் துர்ப்பலமா யிருந்தபடியால் அழக்கூட முடியவில்லை. "என் மனதில் முன்பே அறிகுறிகள் தோன்றின." என்று துன்பக்குரலில் கூறினாள். பின்பொருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு தாதியெடுத்துவந்த கதர்ச் சேலையை யணிந்துகொண்டாள். ஒரு குங்குமச் சிமிழையும் கையிலெடுத்துக் கொண்டாள். மோட்டாரில் உட்கார்ந்து கொண்டு வாயுவேகம் மனோவேகமாய் ஜீவனை நாடிச் சென்றாள். இங்கு ஜீவனின் இதயம் துடித்துக் கொண்டிருந்தது. லீலா வந்ததும் ஜீவனின் படுக்கையில் திடீரென்று வீழ்ந்து பிரக்ஞையிழந்தாள். அருகிலிருந்தவர்கள் டாக்டரை யழைக்கச் சென்றனர். சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்த லீலா, "ஜீவன் நான் வந்து விட்டேன்" என்று தீனஸ்வரத்தில் கூறினாள்.

"யார்? லீலாவா?........... இல்லை, நீ லீலா யில்லை........... நீ வேறு யாரோ........... என் லீலா இவ்விதமிருக்கமாட்டாள்."

இதைக்கேட்ட லீலாவின் கண்களில் நீர் நிரம்பின. ஆனால் பிணிவாய்ப்பட் டிருந்தபடியால் கண்ணீரும் வறண்டு போயிற்று. ஜீவன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு "அம்மா லீலா வந்துவிட்டாளா?" என்று கேட்டான். "ஆம் குழந்தாய்" என்றாள் தாய். லீலா ஜீவனின் தலையைத் தடவிக் கொடுத்துக்கொண்டே தாழ்ந்த குரலில், "ஜீவன்! நான் உன் சொல்லைக் கேட்கவில்லை. நான் வருந்துகிறேன். என்னை மன்னிப்பாய்" என்றாள். கண்களில் நீர் ததும்ப லீலாவைப் பார்த்தான். லீலா மறுபடியும், "நான் இன்று விவாகம் செய்துகொள்கிறேன். என்னை அங்கீகாரம் செய்துகொள்" என்று சொல்லிக்கொண்டே தன் கையிலிருந்த குங்குமச் சிமிழிலிருந்து கொஞ்சமெடுத்து அவனுடைய கையிற்கொடுத்து, "உன்கைகளால்

எனக்குத் திலகமிட்டு என் வேண்டுகோளை நிறைவேற்றிவை" என்ருள். பலஹீனம் காரணமாக ஜீவனுடைய கை உயரக் கிளம்ப முடியவில்லை. லீலாவினுதவியால் கை சென்று திலகமிட்டது.

"இன்றுமுதல் நீ என் பதியானுய்" என்ருள் லீலா. அவள் தலையிலிருந்த பெரிய பாரமொன்று கீழே விழுந்தது. அவர்களுடைய மனத் திரையில் பால்ய லீலைகள் தோன்றிக் காட்சியளித்தன. ஒருவரை யொருவர் மார்புறத் தழுவிக் கொண்டனர். அருகில் கூடியிருந்த ஆண் பெண் அனைவரும் இக்காட்சியைக் கண்டு பதுமைகளாய்ச் சமைந்திருந்தனர். நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. ஜீவனின் இதயம் படபடவென்று துடித்து ஒடுங்கியது. லீலாவின் பவளச்செவ்வாய் ஜீவனுடைய உலர்ந்த உதடுகளிற் பதிந்தது.

ஃ ஃ ஃ

டாக்டர் வந்தார். ஆயினும் பிரயோஜனமென்ன! ஜீவன் லீலா முற்றுப் பெற்றது.

எனது தமிழ்நாட்டுப் பெண்ணிளஞ் சிங்கங்களே!
எழுமின்! விழிமின்!!

(காரைக்குடி முத்துக்கணபதி)

தேனினும் இனிய செந்தமிழ்ச் சுவையை யுணர்ந்த எனது தமிழ்நாட்டுச்சகோதரிகளே! வீரஞ்செறிந்த வனிதாரெத்னங்களே! காலச் சக்கரம் அதிவேகமாய்ச் சுழன்றுகொண்டு வருகிறது. அச்சுழற்சி வேகத்தினுல் உலகத்தில் நிமிடத்திற்கு நிமிடம் எண்ணற்ற பல மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. ஒரு சமூகமோ அன்றி ஒரு ஜாதியோ அல்லது ஒரு நாடோ பல துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டுமானுல், ஆண் பெண் இரு பாலரும் ஊக்கமுடன் முனைந்து நின்று உழைத்தாலன்றி எடுத்த காரியம் கைகூடாதென்பது யாவரும் நன்கறிந்த விஷயம். சகோதரிகளே! இதுகால் இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு நாடும் தங்களுடைய லக்ஷ்யத்தைக் காப்பாற்றவும் அந்நாட்டுச் சுதந்திரத்தை நிலை நிறுத்தவும்

பல துறைகளிலும் முன்னேறி வரவும் அந்தந்த நாட்டு விருத்தாப் பியர் பாலர் முதல் யாவரும் குறிப்பாக ஆண் பெண்மக்கள் இரு பாலரும் எல்லாச் சுதந்திரங்களிலும் சரிநிகர் சமானமாகவிருந்து தங்கள் தங்கள் நாட்டு நலன் கருதி உழைத்து வருகின்றனர். மேலும் அந்நாட்டவர் இன்று கல்வித் துறையிலும் செல்வத்திலும் கைத்தொழில் விருத்தியிலும் மேலோங்கி நிற்பதுடன் நவ நாகரிக வளர்ச்சியிலும் முன்னேற்றம் கொண்டுள்ளனர். ஆனால், நம் தாய் நாட்டை நோக்கின் நாம் சிறிதும் வருந்தாதிருக்க முடியாது. ஏன்? இன்று நாகரிகத்தில் மேம்பட்டுள்ள மேல் நாட்டினர், காட்டிலும் மேட்டிலும் வசித்து வனவிலங்குகளை வேட்டையாடிப் புசித்துக் கொண்டு திரியும் காலத்தில், நம் நாட்டினர், நாடு கண்டு நாகரிகத் தைப் பரப்பினர். செல்வத்திலும் வியாபாரப் பெருக்கிலும் கைத் தொழில் விருத்தியிலும் மேம்பட்டு நின்று என்றும் அழியாப் பெரும் புகழ் பெற்றிருந்தனர் என்பதை, சரித்திர வாயிலாக நாம் அறியலாம். ஆனால், இன்று நாம் அப் பழம்பெருமைகளை இழந்து விட்டோம். காரணம் நம் நாட்டினரிடம் ஒற்றுமையின்மையே யாகும். தற்காலத் தமிழன் அடிமையையே ஆதரிக்கின்றான். தமி ழன்னை வயிற்றினில் ஜெனித்து தமிழ்நாட்டிலே வளர்ந்துவந்த ஓர் தமிழன் நம் தமிழ்நாட்டு நாகரிகத்தை நிராகரித்துத் தள்ளிவிட்டும் நம் செந்தமிழ்ச் சுவையையும் வெறுத்து நம்மை அடிமைகொண் டுள்ள அன்னிய நாட்டானுடைய நாகரிகத்தில் விருப்பமுற்றும் அந் நாட்டினர்களுடைய பாஷையைப் பயின்று வருவதினாலேயே யா கும். இது நம்மை ஈன்றெடுத்த அன்னை அன்புடனளிக்கும் இன்ன முதை வெறுத்துத் தள்ளிவிட்டு பணம் பிடுங்கி தின்னவந்த ஒரு தாசி யூட்டும் சுவை இல்லா ஊணை விரும்பி நிற்பதை யொக்கும். அவ்விதம் இருந்து வருவதினால்தான் இன்று நம் நாடு எழில் அழிந்து ஆண் பெண் மக்கள் யாவரும் கல்வியற்ற கசடராக வாழும்படி நேர்ந்தது. மேலும் நம் நாட்டில் ஒரு சுயநலம் கருதும் ஜாதியார்கள் ஆண்மக்களே எல்லா நலன்களையும் சுதந்திரங்களை யும் பெற உரிமை உண்டென்றும்; பெண் மக்களுக்கு ஒரு உரிமை யும் கிடையா தென்றும் அடுப்பூதும் கருவிகளாகிய அவர்கள் எப் படிப்போனாலும் பாதகமில்லையென்றும், பெண் ஜென்மம் ஒரு

3

பாப ஜென்மந்தானே என்றும் கூறி தன்னலங்கருதி எழுதிவைத்த சாஸ்திரிகளுக்கு, ஆண் பெண் இருபாலரும் சரிநிகர் சமானம் என்பது அவர்கள் புத்தியில் படாமற்போனது விந்தையிலும் விந்தையாகவே இருக்கின்றது!

சகோதரிகளே! அன்னை பாரதமாதா வயிற்றில் ஜெனித்த அருந்தவப் புதல்விகளே! அன்னை வர்க்கத்தினராகிய உங்களின் நுண்ணறிவையும், மனோவலிமையையும், தீரஞானத்தையும், புறக்கணித்து உங்களை ஒரு துரும்பென மதித்து உங்களை அடுப்பூதும் இயந்திரம் என்றெண்ணி கல்வியறிவை அளிக்காதுஆண்களுக்கு அடிமையாக்கி உங்களை அலல்லுறச்செய்த வைதீகர்களின் காலம் மலையேறிப் போய்விட்டது. கண்மூடித்தனமான பழக்கவழக்கங்களெல்லாம் மண்மூடிப் போய்விட்டன.

எட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

என்று கவியரசர் பாரதியார் பாடிவைத்துச் சென்றபடி இன்று அக்காலம் உங்களை நாடி வந்துவிட்டது. இனியும் நீங்கள் வாளாவிராது உங்கள் மனத்தை அடிமைகொண்டுள்ள அஞ்ஞான இருளை ஞானச் சுடரொளியால் விளக்கித்தள்ளி நீங்களும் பகுத்தறிவு படைத்த மனிதர்களே என்பதையும் ஆண்மக்களுக்கு உள்ளவைகளைப்போல் சகல உரிமைகளும் உங்களுக்கும் உண்டென்றெண்ணி வீர எழுச்சியடையுங்கள்.

உங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருந்த அறியாமையை இன்றுடன் விட்டொழியுங்கள்! ஆண்மக்களோடு நீங்களும் சரிநிகர் சமானமாக வாழ முயலுங்கள். நம் தாயகத்திற்கு பூர்ண சுயராஜ்யம் அடையும் நன்னாள் கிட்டிவிட்டது. அன்னை பாரத மாதாவின் அடிமைவிலங்கு முறிவுபெறுங் காலம் நெருங்கிவிட்டது. அத்துடன் பெண்ணடிமைத் தளையையும் களைந்தெறியுங்கள்! நம் தேச விடுதலையுடன் இந்திய மாதர் விடுதலையும் அடைய வழிகோலுங்கள்! நம்மை அடிமைகொண்ட அந்நிய

நாட்டாரின் நாகரிகத்தில் மோகம் கொள்ளாதீர்கள்! இன்று உங்கள் தாய்நாட்டில் உண்ண உணவிற்கும் உடுக்க உடைக்கும் வசிக்கும் குடிசைக்கும் வழியின்றி ஏழை மக்களாய் வறுமை யென்னும் கொடிய நோய்வாய்ப்பட்டு ஒட்டிய வயிற்றுடனும் வாடிய முகத்துடனும் அலைந்து திரியும் உங்கள் தாய்நாட்டு மக்களுக்கு உணவளிக்கும் ஜீவ சஞ்சீவியான புனித கதராடையையே வாங்கியுடுத்துங்கள்!

வீரஞ்செறிந்த வனிதா ரெத்னங்களே! எழுமின்!! விழிமின்!!! கருதிய கருமம் கைகூடும் வரை சலியாதுழைமின்! என்று நம் அன்னையின் அருந்தவப் புதல்வர் சுவாமி விவேகானந்தா வீர தீரத்துடன் புகன்றிருப்பதை எண்ணி எழுங்கள்!

வாழ்க பெண்ணுலகம்!

மகளிர் இல்ல வாழ்த்து மணி

புதுவை R. S. ராஜலெக்ஷிமி

ஆசிரிய விருத்தம்,
இராக மாலிகா

மாயாமாள கௌளம்]

ஆத ரவிலாத இளம் பாவையர்கள் மகிழ்ச்சியுற
ஆர்வம் கொண் டுழைக்கும் மணியே
அவனிதனிலே மிக்க கவனமாய் பெண்ணடிமை
அகற்றி வரும் தீர மணியே

கரகரப் பிரியா]

நீத முடன்கைமையர்கள் துயரமது ஏகவே
நித்தமும் உழைக்கும் மணியே
நீணிலத்தில் மாதர் நேர்வாழ்வு பெருகவே
நிகழ்ச்சியுரை பேசும் மணியே

நீலாம்புரி]

பூதலத்தில் உடல் பொருள் ஆவி தனைத்யாகம்
புரிந்து வரும் வீர மணியே
புனித நல்வாழ்க்கையை இனிதுடன் பெற்றிட
போதிக்கும் புண்ய மணியே

முகாரி]

மாதர் மறுமணமென்னும் மாசிகையைத் தோற்றிவைத்த
மகத்தான தியாக மணியே
மங்கைமணி துங்கமணி எங்கள்மணியான அன்னை
மரகதவல்லி மணியே

"பர ப்ரம்மானந்த வேணுகானமே"—என்ற மெட்டு

பல்லவி

மாதர் மறுமண சஞ்சிகையே
மாசிலாத (மா

அநுபல்லவி

பூதலமீதில்வித வையர்க்கே மகிழ்
புனிதமாயூட்டியின் பப்பெருக்கே தரும் (மா

சரணம்

தேசமெங்கும் சென்றுலாவி
தேர்ந்த வெற்றி கொண்டனையே
நேசமாய் வித வையர்க்கு
நேரும்துயர் விண்டனையே (மா
இந்திய பெண்கள் துயர்
ஏகமொழி தந்தனையே
சிந்தைமகிழ் கொண்டுனக்கு
சீராய் தந்தோம் வந்தனையே (மா
மாசின்றிமறு மணங்கள்
மானிலமெங்கும் சூழ்ந்திடவே
ஆசிரியை மரக தவல்லி
அம்மைதினம் வாழ்ந்திடவே (மா

செருப்புக்கும் தடையா?

(ரமணன்)

இப்பரந்த ஞாலத்தில் மனிதர்கள் மிருகவாழ்வு வாழ்ந்த காலமும் ஒன்றுண்டு. இன்னும் அவ்வித வாழ்வை மேற்கொண்டவர்கள் பலவிடங்களில் காணப்படுகின்றனர். இப்பொழுது நாகரிகமடைந்தவர்களென்று சொல்லிக்கொள்ளும் நாம், வாழ்க்கை முறையிலோ, ஒழுக்கத்திலோ அவர்களைவிட முன்னேறிவிட்டதாக கனவு காண்கிறோம். ஆனால், அக்கனவு ஓரளவு உண்மையாக இருந்தாலும், பல வழக்கங்கள், முறைகள், நம்பிக்கைகள் மேற்கண்ட நாகரிக வளர்ச்சியை நாமடைந்தோமென்று சொல்வதற்கு பொருந்தாமலிருக்கின்றன.

கடலைக் கலக்கும் கப்பல்கள், விண்ணில் சஞ்சரிக்கும் விமானங்கள், புகைவண்டிகள், மோட்டார்கள், சைக்கிள்கள் இன்னும் பல லட்சக்கணக்கான மைல்கள் கேட்கவும் பேசவுமுள்ள மின்சார வசதிகள் ஆகியவற்றைப் பார்க்கும்போது 'அவை நமக்கு நாகரிகச் சின்னங்கள்தான். சந்தேகமில்லை. என்றாலும், நிறம் மதம் ஜாதி (அதிலும் மேல் கீழ் என்ற ஓட்டைக் கவசத்துடன்) ஆகியவற்றால் பிரிந்திருப்பதும் ஒன்று மறியாத ஸ்திரீகள் பேரிலும் குழந்தைகள்பேரிலும் வெடிகுண்டு மழை பெய்யச் செய்வதும், அவர்களைச் சித்திரவதை செய்வதும் நாகரிகச் சின்னமாகுமா?

வாலிபர்களே! கொஞ்சம் தயவு செய்து உற்றுநோக்குங்கள். நாகரிக ஏணியில் எவ்வளவு தூரம் ஏறினோமோ அவ்வளவு தூரம் கீழ்நோக்கி நமது சமூக வாழ்வும் அழுந்திவிட்டது.

நாம், இப்பொழுது நாகரிக உலகத்தில் பிரஜா உரிமை படும் பாட்டைப் பற்றிப் பேசுவதென்றால், அதற்கு முடிவிராது. அதைப் பற்றி எவ்வளவோ பெரிய மனிதர்கள் கட்டுரை கட்டுரையாக எழுதியிருக்கிறார்கள்; எழுதுகிறார்கள்; இன்னும் எழுதிக்குவிக்கவே போகிறார்கள். நிற்க,

மதவெறியால் படும் பாடும், நிறவெறியால் படும் பாடும் எழுதத் தக்கவையல்ல. அதை நாகரிக சமூகத்தில் ஒரு குஷ்ட நோய்க்

குச் சமம் என்று பெரியோர்கள் கூறுகின்றனர். மற்றபடி சமூகம் என்ற முறையிலாவது ஒரு ஒழுங்கான கட்டுப்பாடு இல்லையென்றால், அதைத் தவிர்த்த வஞ்சகப் படுகுழி வேறொன்றுண்டோ?

சமூகங்களில் வைதீகம் என்ற கோட்டையைத் தகர்த்தெறிந்த சோதர சோதரிகள் பலரிருக்கிறார்கள். காரண காரியமறியாமல் செலவழித்து அனுவசிய ஆடம்பரத்தில் மூழ்கியிருக்கும் செல்வர்களுமிருக்கிறார்கள். ஆனாலும், தன் சரீரத்தைப்பற்றிக் கிஞ்சிற்றும் முயற்சியின்றிக் காரணமல்லாது கஷ்டப்படும் ஒருவகை மக்களும் இருப்பதென்றால் அதை ஒரு கொடிய நோய்க்கு ஒப்பிடுவது பொருந்துமல்லவா?

கோடைக்காலம்! நன்றாய் பழுக்கக் காய்ந்த இரும்பைப் போன்றிருக்கும் புழுதியில் நல்ல நடுப்பகலில் மூன்று மாதத்து சிசு ஒன்றைத் தூக்கிக்கொண்டு நடுத்தர வயதுள்ள பெண்மணி யொருத்தி வீதியை யடைந்தாள். தனது சாமர்த்தியத்தால் வீதியைத் தாண்டிச் செல்லலாமென்றுதான் நினைத்தாள். அடுத்து சுடு மணலில் கால்வைத்தாள். பாவம்! பிரக்ஞையற்று துவண்டு கீழே விழுந்து துடித்தாள். சிசுவும் துடித்தது. காப்பாற்றச் சென்ற கர்ப்பிணியான பெண் ஒருத்தியும் காயமடைந்தனள்; ஏன் இந்தத் தொல்லை என்றால் சமூகக் கட்டுப்பாடு காரணமாகிறதாம். அதாவது பெண்மணிகள் செருப்பணியக் கூடாதாம் (எந்த சாஸ்திரத்தில் இருக்கிறதோ) இதுதான் நாம் அடைந்துள்ள நாகரிக ஏணியின் உச்சஸ்தானமோ?

சகோதரிகளே! நீங்கள் வீரர்களைப் பெறவேண்டுமென்ற ஆசை உங்களுக்கு இல்லையா?

கவைக்குதவாததும் மகாசிக்கல் நிறைந்ததும் மூடபக்தியால் மூடப் பெற்றதுமான சமூகக் கட்டுப்பாடு செருப்பையும் கட்டுப் படுத்துவது ஆச்சரியமல்ல. ஆனால் அந்தக் குருட்டுத் தனத்தை நம்பிக் கஷ்டப்படும் நீங்கள் எப்படி இந்நாட்டின் எதிர்கால வீரர்களுக்குத் தாய்மார்களாவீர்கள்? அதையாவது சற்று சிந்தியுங்கள்.

விமல நாதன்
அல்லது
விதவா விவாகம்

பழ. மு. கண்டவராயன்பட்டி

நண்பா! இன்றுமாலே பாட்மிண்டனுக்கு வரமுடியாது. நான் ஒரு வேலேயாக ஓர் ஊருக்குப் போகிறேன். நம் நண்பர் களிடம் தெரிவித்துவிடு.

"நீ எந்த ஊருக்கு, என்ன வேலே அப்படி?"

"அளகாபுரிக்குச் செல்கிறேன். வந்தவுடன் காரியம் சித்தி அடைந்தால் கூறுகிறேன்."

"ஓஹோ! எனக்குத் தெரியும்! காரியம் சித்திதான். நீ போகிற விஷயம் நன்ருக நான் அறிவேன்! உனக்குப் பொருத்த மானதே!

"நண்ப உணக்குத் தெரியுமா? என்ன தெரியும்?"

"நீ போகிற விஷயம் இன்னதென்று தெரியும்! பெண் பார்க் கத்தானே போகிருய்?"

"யாரப்பா உனக்குச் சொன்னது? ஏதோ தெரிந்தவன் போல பேசுகிருயே?"

"ஆம்! தெரியாமலா? தெரிந்துதான் பேசுகிறேன்.

"சரி. எனக்குப் பொருத்தமானது என்ருயே! என்ன?"

"பெண்தான்! உன் அழகுக்கும், அந்த பெண்ணின் அழகுக் கும் ரொம்பப் பொருத்தம்! விவாக அமைப்பும், நல்ல அழ குடைய ஒருவனுக்கு அழகில்லாதவளும், சிவப்பு நிறமும் முகவசீகரமும் உடைய ஒரு பெண்ணுக்கு, கறுப்பு நிறமும் முகவசீகரமில்லாத புருஷனும், உத்தமனுக்கு விபசாரி யும், ஸ்ரீ லோலனுக்கு உத்தமியும், இப்படி நேர் மாருகவேதான் அநேகமாக அமையும் போலிருக்கிறது. உத்தமனுக்கு உத்தமி

யும், அழகிக்கு அழகனுமாக இருந்தால் திருஷ்டிபடுமோ என்னவோ? யார் கண்டது?

"சரிதான்! என்னையும் ஏதோ ஓர் ரகத்தில் சேர்த்துவிட்டாய் போலிருக்கிறதே!"

"உன்னையா? அப்படிச் சொல்வேனு! நீ தங்கமான பிள்ளையாயிற்றே!"

ஃ ஃ ஃ

அளகாபுரியின் தென்பாரிசத்தில் ஓர் பெரிய வீதியிலுள்ள அழகான ஒரு வீட்டின் முகப்பில் இருவர் சாய்வு நாற்காலியிலமர்ந்த வண்ணம் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சைக் கவனிப்போம்:

"பணமும் இருந்து பையனும் நல்லவனுய்க் கிடைத்துவிட்டால், இந்த வருஷமே கலியாணத்தை முடித்துவிடலாம். விசாலத்திற்கும் கிட்டத்தட்ட வயது 14க்கு மேல் ஆகிறது"

"அப்படியானல் எங்களூரில் பார்க்கிறது தானே?"

"ஆமா! அங்கே தான் சீமான் சிதம்பரம் செட்டியார் மகன் ராமநாதனுக்கு (சீமான் என்றால் பெரும்பணக்காரர் அல்ல! அவரது பட்டப் பெயர் அது) செய்யலாமென்று நினைத்தோம். பணங்காசுகள் சாதாரணமாய்த் தானிருக்கிறதாம். பையன் ரொம்ப அழகாய் இருக்கிருன். ஆனல் அவனுடைய நடத்தைகள் எப்படியோ தெரியவில்லை. மாப்பிள்ளையைப் பொறுத்துத்தான் செய்யலாமென நினைத்தோம். உங்களுக்கு தெரியுமே? பையன் எப்படி?"

"நல்லபையன்தான். அவனிடம் சில கெட்டபழக்கங்கள் உண்டு. அதை விட்டால் தான் அவன் நல்லபெயரைக் காப்பாற்றலாம்"

"ஏன் என்ன? சூது, குடி இவைகள் பழக்கமோ?"

"இல்லை! வீட்டில் ட்ராமாவுக்குப் போவதாகவும், சினிமாவுக்குப் போகிறேனென்றும் சொல்லிவிட்டு, தாசிகள் வீட்டுக்குப் போவான் போலிருக்கிறது. சூது ஆடுவானே என்னமோ தெரியாது. குடிக்கமாட்டான்"

"அப்படியானால் கண்ணில் முழித்தாலும் ஆகாது! வேறே பார்க்கவேண்டியது தான்."

ஃ ஃ ஃ

விமலா 16 ஆண்டுகளைக் கடந்து இப்போது தான் பருவமடைந்த மங்கை. அழகே திரண்டு உருவெடுத்து வந்தாற்போலிருந்தாள். அவள் அழகும், அதற்கேற்ற குணமும், போதிய கல்வியும் கற்றிருந்தாள். ஆனால் அவள் வி....த....வை! ஆம் விதவை தான்! சுந்தரி அவளுடைய பள்ளித்தோழி. அவள் என்ன சொன்னாலும் செய்யத் தயங்கமாட்டாள். இருவரும் அத்யந்த சிநேகிதைகள். எப்போதும் இருவரும் ஒன்றாகவேதா னிருப்பார்கள்.

ஒரு நாள் மாலை. சூரியன் தன் பொன்னிறமான கிரணங்களைப் பரப்பி அனைத்தையும் பொன்மய மாக்கினான். விமலாவும், சுந்தரியும் வீட்டின் முன் இருக்கும் வேப்பமரத்தின் அடியில் பாண்டி ஆடிக்கொண்டிருந்தார்கள்.

தெருவில் 20 வயதையுடைய அதி சுந்தரமான வாலிபனொருவன் வந்துகொண்டிருந்தான். அவனது கண்கள் இவ்விரு நங்கைகள் மீதும் பட்டன. பொன்மயமான கிரணங்களில் பட்ட விமலாவின் முகத்தை--அந்த அழகுபொருந்திய முகத்தை ஸ்வர்ணவிக்ரகம்தானோ என ஐயமுற்றான். அருகில் நெருங்கவும், விமலாவின் விழிகள் அவனது கண்களைச் சந்தித்தன. இருவர் கண்களும் உரையாடின. பிறகு வாய்ச் சொற்கள் ஏது பயன்? மறு நிமிடம் விமலாவின் பார்வை தரையில் கிடந்த பாண்டிமுத்துகளில் சென்றன. இளைஞனும் தன்வழியே சென்றான். விமலா மறுமுறை பார்க்கும்பொழுது அந்த தெருவின் கடைசி வீட்டில் நுழைந்தான்.

"விமலா! நீதான் தோல்வி!" என்றாள் சுந்தரி.

"ஏண்டி நீயல்லவா தோல்வி!"

"என்னடி! நீ ஆட்டத்தைக் கவனிக்கவில்லை போலிருக்கிறது! உன் மனம் எங்கேயோ சென்று இப்போதுதான் திரும்பியிருக்கிறது!"

"போடி! எங்கேடி என் மனம் செல்கிறது!"

"அதோ அந்த கோடிவீட்டில் ஒருவர் நுழைந்தாரே அவர்

பின்னேடே போய்விட்டு வருகிறதல்லவா? ஒளிக்காமல் சொல்லி விடு."

"போடி! உனக்கு இந்த விளையாட்டுத்தான் எப்போதும்!"

"போடி போ! விளையாட்டா? இதற்குத்தான் உன் அப்பா தெருவில்போய் இருக்கக்கூடாதென்று சொல்வது. கன்னிப்பருவ மடைந்த பெண்கள் இப்படி இருக்கக்கூடாது. அதிலும் விதவை யான உன்னை என்ருல், வெறும் வாயைமெல்லும் ஊர்ஜனங்கட்கு அவல் கிடைத்தமாதிரிதான்."

'டிங் டாங், டிங் டாங்' என்று இரவு மணி 11 அடித்தது. விமலா படுக்கையில் புரண்டுகொண்டு கிடக்கிருள். நித்திராதேவி அவளை அணுக அஞ்சுகிருள். மன்மதன், உனக்கும் ஒரு மன்மதனைக் காட்டிவிட்டேன் என்று தன் புஷ்ப பாணங்களை எய்து அவளை இம்சிக்கிருன்,

"ஆ! என்ன சுந்தரவடிவம்! மன்மதன்தானே? அல்லது மானிடன்தானே? என்ன அழகு! என்ன சௌந்தர்யம்! எனக்குகந்த மணாளன் அவரேதான்! ஹா! நான் விதவையல்லவா? என்னை அவர் மணந்துகொள்வாரா? என்னை விதவை என்று நினைத்திருக்கமாட்டார்! நான் பட்டுப்புடவையல்லவா அணிந்தி ருக்கிறேன். ஆமாம் அவர் அந்த கோடி வீட்டுக்குப் போவா னேன்? அது, தாசி சுலோசனவின் வீடல்லவா? அங்கு போகும் இவர் யார்? எல்லாம் சுலோசனவின் தம்பி ராஜனை அழைத்துக் கேட்டால் தெரிந்துவிடுகிறது என்று நினைத்தவண்ணம் சற்று அயர்ந்து விடுவாள். இளைஞனின் கண்கள் இவள் கண்களை சந்திப் பதாகத் தோன்றும். விழித்துப் பார்ப்பாள். மாலையில் நடந்தவை என உணர்ந்து மறுபடியும் சற்று நித்திரை.

காலை மணி 8 இருக்கும். விமலா, வீட்டின்முன் வேப்ப மரத்தடியில் கிடந்த கல்லில் உட்கார்ந்திருந்தாள். தெருவில் சென்ற ஒரு பையனைக் கூப்பிட்டு "ராஜு! நேற்று சாயந்திரம் ஒரு செட் டியார் வந்தாரே, அவர் யார்? உனக்குத் தெரியுமா? சொல்லு" என்று அவன் கையில் ஒரு ரூபாயைக் கொடுத்தாள். "ஓ தெரியும். ஸ்ரீமான் சிதம்பரம் செட்டியார் குமாரர் ராமனுதன் என்பவர் இவர் தான்."

"இதற்குமுன் எப்போதாவது வந்திருக்கிறாரா?"

"ஆம் ஒருமுறை வந்திருக்கிறார்"

"சரி போய்வா"

ராஜன் சென்றுவிட்டான். "சரிதான் இவருக்குத்தான் நம் சிறிய தந்தை மகள் விசாலத்தை விவாகம் பேசினார்கள். தாசி வீட்டுக்குப் போவார் என்றுதானே சொல்லிவிட்டு, வேறு இடத்தில் இப்போது செய்கிறார்கள். விசாலத்திற்கு அதிர்ஷ்டம் இல்லை! இவரைப் போன்று சுந்தர புருஷரை நான் பார்த்ததே கிடையாது! எவ்விதமும் இவரிடம் என்மனதிலுள்ளதைத் தெரிவித்து, என்னை ஆட்கொள்ளும்படி கேட்டுக்கொள்ள வேண்டும். அவர் இணங்காவிடில், என் வாழ்நாள் முழுதும் அவர் வீட்டில் பணிவிடை செய்தேனும் காலத்தைக் கழிப்பது" என மனவுறுதி செய்துகொண்டாள்.

° ° °

"இனி அவள் தகப்பனார் அல்ல, இன்னும் வேறு யாராலும் அவள் மனத்தை மாற்ற முடியாது., அவளது விழிகள் உன்னையே மணப்பேன் என்று உறுதி கூறி விட்டனவே! அவள் நான் சுலோசனாவின் வீட்டுக்குப் போனதைப் பார்த்திருப்பாள். என்ன நினைத்தாளோ? இந்த தாசிலோலனையா மணப்பது என்று வெறுத்துவிட்டால்? அவள் தகப்பனார் இதனால் தான் இப்போது விவாகம் செய்யமறுக்கிறார். அவளைப் பார்க்கத் தானே போனேன், அங்கு ஏன் சென்றேன்." என பலவாறு அவன்மனம் குழம்பியது. கடைசியில் "எப்படியும் அந்த சுந்தரவதனியை மணந்தே தீருவேன்" என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டான்.

"பாட்மிண்டனுக்குப் போய்விட்டு வருவோம்" என்று எண்ணியவனாய் கையில் பாட்டுடன் வெளிக்கிளம்பினான் ராமநாதன். ராஜன் எதிரே வந்தான். "ராஜன்! பாட்மிண்டனுக்கு வரவில்லையா?"
"வருகிறேன், நீ அன்றுபோன விஷயம் முடியவில்லையா? வேறு இடத்தில் அந்தப் பெண்ணைச் செய்கிறார்களாமே!"

"உண்மை தானா; எப்போது கலியாணம்?"

"இருபத்தேழாம் திகதி"

"ஓ! அந்தப் பெண் இவளுக்கு சிறிய தந்தை மகள் அல்லவா?"

"சிறிய தந்தை மகளா? அவளுக்கு சிறிய தந்தை கிடையாதே? நீ விசாலத்தின் பெரியப்பா மகள் விமலாவைப் பார்த்துவிட்டு வந்துவிட்டாய் போலிருக்கிறது! அவளும் நல்ல அழகுடைய பெண் தான். அவள் விதவை அல்லவா?"

"என்ன! விதவையா?"

"ஆம்! விதவைதான். அவளுக்கு 11 வயது ஆகும்போது, அவள் தாய் மிக்க மோசமான நிலைமையிலிருந்தாள். அவள் கண்களால் பார்க்கும் பொருட்டு, அப்பொழுது விவாகம் செய்தார்கள். விவாகமாகி 2 வருஷத்துக்குள், விமலா பருவமடையுமுன் பதியை இழந்த பாக்கியசாலியானாள். வெள்ளைப் புடவை கட்டமறுத்து அழுதாள். அவள் தந்தையும் பெரியவளானால், தானே வெள்ளைப் புடவையை அணிந்து கொள்வாள், என்று சொல்லி பட்டுப் புடவை அணிந்துகொள்ள அனுமதி கொடுத்தார்."

"நான் அவளைத் தானே விசாலமென்று எண்ணினேன். விதவையானால் தான் என்ன? அவளையே நான் மணந்து கொள்ளுகிறேன். இதற்கு முன் நம் சமூகத்தில் கண்டவராயம் பட்டியில் ஒரு இளைஞர் விதவா விவாகம் செய்து, மதிகெட்ட இந்த சமூகத்துக்கு வழிகாட்டவில்லையா? அந்த வழியில் நானும் சென்றாலென்ன?"

"நண்ப! உன்னுடைய எண்ணம், போற்றுதற்குரியது! புனிதமானது!! அப்படியே செய்வாயாக! உன் எண்ணம் ஈடேற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்."

ஃ ஃ ஃ

விதவா விவாக சங்கத்தாரால் வெளியிடப்படும் பத்திரிகை ஒன்றில் கீழ்க்காணும் விளம்பரம் ஒன்று காணப்பட்டது.

விதவைப் பெண் தேவை!

நல்ல அழகும் சிவப்பு நிறமும் நல்ல உடற் கட்டுமுடைய இருபது வயதுள்ள ஒரு தனவைசிய இளைஞருக்கு, 16 வயதுக்கு

மேற்படாம்லும் போதியகல்வியும் அழகும் சிவப்புநிறமும் உடைய ஒரு விதவைப் பெண் தேவை. C% விதவா விவாக சங்கம்.

பத்திரிகை வெளிவந்த மறுதினமே விதவா விவாக சங்கத்துக்கு ஒரு கடிதம் வந்தது. அது விமலாவின் கடிதமென்பதில் சந்தேக மென்ன?

அடுத்த மாதம் 12ஃ விதவா விவாக சங்கத்தில் அநேக சீர்திருத்தவாதிகளின் முன்னிலையில் ஸ்ரீ ராமநாதனுக்கும் விமலாவுக்கும் நடைபெறும் விவாக முகூர்த்தத்திற்கும் விருந்துக் கச்சேரிக்கும் உங்கள் வரவு பெரிதும் வேண்டப்படுகிறது. வராதவர்கள் உங்கள் வாழ்த்தை அனுப்ப மறந்து விடாதீர்கள்.

ஹிந்து விதவா விவாக நிலைய ஆரம்பமும் அபிவிருத்தியும்

(ஆடிமாதத் தொடர்ச்சி)

ஒரு வருடாந்திரச் செலவு ரூ. 13,000ஆகிறது. வருடாந்திரச் சந்தாவாக ரூ. 35,00 வருட வட்டியில் ரூ. 2,000 மும் செலவினத்தில் ரூ. 3,000ம், அபூர்வமாக நன்கொடையாகக் கிடைப்பவைகளும், வசூல், மாணவர்களிடமிருந்து வசூலித்த தொகைகளிலிருந்தும் ரூ. 4000 மாகயிருந்தன. இந்த ஸ்தாபனத்திலிருந்து வெளியேறிய அநேகவிதவைகள் பொதுஜனநன்மைகளுக்கான இலாகாக்களிலிருந்து தொண்டுசெய்து வருகின்றனர், அயல் நாடுகளிலிருந்தும் பல விதவைகள் இங்குவந்து குழுமினர், சென்னை காக்கிஞடா, ராஜமந்திரி, மைசூர், மங்களூர், பீரார் மத்திய மாகாணம் மத்திய இந்தியா முதலிய பலபாகங்களிலிருந்தும் விதவைகள் வந்துகொண்டிருந்தனர். கற்றறிந்த அறிஞர்களும், பிரமுகர்களும் புனவிற்கு விஜயம்செய்த பொழுதெல்லாம் ஆஸ்ரமத்திற்கு வந்து போகாமலிருக்க மாட்டார்கள். சங்கத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பனிரெண்டு பெயர்களடங்கிய கமிட்டியாரால் ஸ்தாபனத்தின் வேலைகள்யாவும் கவனிக்கப்பட்டு வந்தன. ரூ. 100-க்குக் குறையாத நன்கொடை அளித்தவர்

களும் வருடத்திற்குக் குறைந்தது ரூ. 10 சந்தா செலுத்துபவர்களுமே அக்கமிட்டியின் மெம்பர்களாவார்கள். ஸ்தாபனத்தின் வளர்ச்சி அதிகரிக்கவே, பிரத்தியேகமான பிராஞ்சு போஸ்டாபீசும் ஆஸ்ரமத்திற்காக ஏற்படுத்தப்பட்டு, ஒரு பெண்மணி போஸ்டுமாஸ்டராக இருந்துவருகிறார். இந்தியாவிலேயே இது ஒரு தனி சம்பவமாகும். பல கனவான்களும், பெண்மணிகளும் ஸ்தாபனத்தின் முன்னேற்றங்கருதி பல உதவிகள் செய்துள்ளனர். அவர்களில் டாக்டர் சர் R. G. பண்டர்கார் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே நமது கமிட்டியின் அக்ராசனராயிருந்து அரிய தொண்டாற்றியுள்ளார். அவ்வப்போது அவர் யோசனை புகட்டினதோடல்லாமல், பெரிதும் பொருளுதவி புரிந்திருக்கின்றார். ஜஸ்டிஸ் ரானடே அவர்களும் அவரது மனைவி திருமதி ராமாபாய் ரானடே அவர்களும் ஆஸ்ரமத்திற்கு விஜயஞ்செய்து ஆதரவளித்து வந்தனர். திருமதி ராதாபாய் அவர்களும் ஏனைய கமிட்டி அங்கத்தினர்களும் பிரயோஜனமான உதவிகளையெல்லாம் செய்திருக்கிறார்கள்.

மஹிலா வித்யாலயம் என்ற மற்றொர் அபிவிருத்திக்கான முயற்சியும் செய்யப்பட்டது. விதவா நிலையத்தின் அஸ்திவாரம் யாதொரு முன்னேற்பாடுமில்லாமல் ஆரம்பிக்கப்பட்டது. விதவையர்களைச் சேர்ப்பது அக்காலத்தில் மிகவும் கஷ்டமாயிருந்தது. எனவே விதவைகளின் சிறுமிகளையும் சகோதரிகளையும் யாதொரு செலவின்றி ஸ்தாபனத்தில் சேர்த்துக்கொண்டோம்.

ரத்னகிரி ஜில்லாவிலிருந்து மத்திய வகுப்பைச் சேர்ந்த கனவானொருவர் தன்னுடைய 14 வயதுள்ள விதவைப் பெண்ணையும் மற்ற இரண்டு கன்னிப் பெண்களையும் இங்கு அனுப்பலாமாவென்று எனக்கு எழுதியிருந்தார். தகுந்த வயது வரும்வரையில் பெண்களை விவாகஞ்செய்து கொடுக்காமலிருக்கும் பட்சத்தில் நான் இந்நிலையத்தில் ஏற்றுக்கொள்ளத் தயாரென்று எழுதியிருந்தேன். அவ்வாறே அவரும் மூன்று பெண்களையும் அனுப்பியிருந்தார். இப்புதிய மாணவர்களால் விதவா நிலையம் ஒரு தனிவனப்புடன் விளங்கியது. ஆரம்பத்தில் நிலையத்திலுள்ள மாணவிகளின் பெண்களும் சகோதரிகளும் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். பின்

னர், அங்கு இடவசதி யிருக்குமானால் விவாகமான பெண்களும் விவாகமாகாத பெண்களும் தங்கள் சொந்த செலவில் படிக்க இஷ்டமிருந்தால் சேர்த்துக்கொள்ளலா மென்று முடிவுசெய்தோம். இச்செய்தியை அறிந்த ஜனங்கள் கன்னிப் பெண்களையும் விதவா நிலையத்திற்கு அனுப்பினார்கள். இவ்விதம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே, விதவையில்லாத மாணவர்களின் சங்கியை மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் நாலிலொரு பாகத்திற்கு அதிகரிக்கக் கூடாதென்று திட்டஞ்செய்தோம். இதையும் சமாளிக்க முடியாமற்போகவே விதவைப் பெண்களைச் சேர்த்துக்கொள்வதற்காக ஏற்கனவே சேர்க்கப்பட்ட கன்னிப் பெண்களை ஒவ்வொருவராக நீக்கவேண்டியிருந்தது. என்றாலும் விதவையரல்லாத பெண்களையும் சேர்த்துக்கொள்வதற்கு தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. என்னுடைய அநுதாபம் வர வர அதிகரித்தது. தக்காணத்திலுள்ள ஹிந்துவல்லாத ஒருவருக்கு பிரமச்சரிய நிதி திரட்டுவதற்கு அவரால் உதவிசெய்ய முடியுமாவென எழுதினேன். இத்தகைய ஏற்பாட்டில் ஒரு கைங்கரியம் செய்ய மிகவும் ஹேதுவாக விருந்தது. ஏழைப் பெண்களை அவர்கள் பெற்றோர் 20 வயது வரையில் விவாகஞ்செய்து கொடுக்காமலிருக்க முடியுமென்ற உறுதி கொடுப்பார்களேயானால் தாராளமாய்ச் சேர்த்துக்கொள்ள முடியும். அம்மனிதரும் மாதந்தோறும் ரூ. 25 அனுப்புவதாக வாக்களித்தார். 4—3—1907-ல் தக்காண கல்வி சங்கத்திற்குச் சொந்தமானதும், லாக்டி பூவிற்கு அருகாமையிலுள்ளதுமான பரந்த இடத்தில் மஹிலாவித்யாலயம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்விதமாக மஹிலாவித்யாலயம் மெதுவாகவும் நம்பிக்கையுடனும் முன்னேற்றமடைந்து வந்தது. திரு. M. K. காட்ஜில் B. A, திரு. கால்ஜெகார் ஆகிய இருவரும் இப்புதிய ஸ்தாபன வளர்ச்சிக்காக பேராதரவளித்து வந்தனர். இப்பழமையான ஸ்தாபனம் இத்தகைய உயர்நிலையிலிருக்கும் காரணம் இவ்விரு பெரியார்களின் நன் முயற்சியாற்றான் நாங்கள் மூவரும் சேர்ந்து எங்கள் சொந்தப் பணத்திலிருந்து ஸ்தாபனத்திற்கு ரூ. 3000 வீதம் ஒவ்வொருவரும் கடன் கொடுத்து வந்தோம். மேற்கொண்டு வேண்டிய பணத்திற்கு வழியொன்றுந் தெரியாது. யாராவது கடன் கொடுப்பார்

களாவென்றும் முயன்று பார்த்தோம். கட்டிடத்தை அடமானம் வைத்தாவது பணம் வாங்கலாமாவென்று பார்த்தும் ஒருவரும் முன்வரவில்லை. என்றாலும் அதற்காகக் கட்டிடத்தைக் கட்டுவதில் தயக்கமின்றி மேலும் மேலும் கட்டிக்கொண்டே போவோம். அதிர்ஷ்ட வசமாக திரு. H. A. வாடியா அவர்கள் ரூ. 25000ல் மூன்றிலொரு பாகத்தைக் கொடுப்பதற்கு இசைவதாகவும், கட்டிடத்தின் பெயரை பாய் மோட்லிபாயின் பெயரால் அழைக் கப்பட வேண்டுமென்ற நிபந்தனையும் கேட்டிருந்தார். இக்கடி தத்தைப் பார்த்து அளவிலா ஆனந்தமடைந்தோம். தவிர திரு. M. K. காட்ஜில் அவர்கள் எதேஷ்டமாக சந்தாக்களை வசூலித்த தின் பயனாக நாங்கள் எதிர்பார்த்ததிற்கு அதிகமான தொகை வரப்பெற்றோம். எல்லாச் செலவுகளும் கொடுக்கப்பட்ட பின்னர் ரூ. 13000 கடனிருக்குமென எண்ணினோம். 100 பேர் தங்கு வதற்கு புதிய இடம் வசதியளித்தது. விதவா நிலையத்தில் அளிக் கப்பட்ட கல்வி, விதவையர்கள் நிலயத்தினின்று வெளியேறினா லும், தங்கள் வாழ்க்கையில் பயன்படத்தக்க வழிகளிலிருக்குமாறு தனி அம்சத்துடன் கற்பிக்கப்பட்டு வந்தது. இன்னும் மூன்று அல்லது நான்கு வருடங்களில் இடவசதி யிருப்பது துர்லபமென எண்ணினோம். விதவா நிலயத்தில் மெட்ரிகுலேஷன் அல்லது முடிவான தாய்ப்பாஷைக்கல்வி வரையிலாவது கல்வி கற்பிக்கப் பட்டது. மஹிலா வித்யாலயத்தில் நல்ல மனைவிகளாகவும் நற்றாய் களாகவும் பின்வாழ்க்கையிலிருக்கத்தக்க வழிகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில்: மராத்தி பாஷைகளில் மிக்க அறிவு வளர்ச்சியுடன், சமஸ்கிருதம், ஆங்கிலப் பொது அறிவு, ஆரம்பக்கணிதம், புஸ்தகப்பாதுகாப்பு, வீட்டுப் பொருளாதாரம் உடல் நூல், வான சாஸ்திரம், சுகாதாரம், பாகசாஸ்திரத்தில் பயிற்சி, குழந்தை பராமரிப்பு முதலியனவும் சேர்க்கப்பட் டிருந்தன.

இறுதியாக என் எண்ணங்களையும் வேலைகளையும் உருவகப் படுத்த ஆரம்பித்தேன். சுய தியாகத்துடன் அனேகர் தொண்டு புரிய முன்வந்தாலொழிய இக்காரியங்கள் சித்திபெறுவது அசாத்ய மல்லவா? பெண்தொண்டர் படையொன்றைத் திரட்டவேண்டு மென்ற எண்ணம் என் மனதில் நன்குபதிந்தது. 1898-ல் ஹிந்து

விதவா நிலையம் பதிவு செய்யப்பட்டபோது சங்கத்தின் சட்ட திட்டங்களில், "அநுதாபத்துடன் தர்ம சேவையாற்றத்தக்க ஹிந்து பெண் வகுப்பினரை உண்டுபண்ணுவது" என்ற ஓர் உட்பிரிவும் சேர்க்கப்பட்டது. பின்னர் விதவா நிலைய சம்பந்தமாக 1902ல் கீழ்க்கண்ட கருத்தடங்கிய துண்டுப் பிரசுரமொன்றும் வெளியிடப்பட்டது.

"பின் வாழ்க்கையில் தங்கட்குப் பயன்படத்தக்க வழிகளில் மட்டும் இப்பெண்கள் பிரவேசிக்காமல் சுற்றுப்புறங்களிலுள்ள சகோதரிகளுக்கும் வேண்டிய உதவிகள் எப்பொழுதும் செய்ய வேண்டும். தவிரவும், இவ்வாஸ்ரமத்தினின்று வெளியேறும் மாணவர்களிற் சிலர் பொருள் சேகரிப்பதிலேயே தங்கள் கவனத்தைச் செலுத்தாமல் இத்தகைய நிலையத்தைப் போன்ற ஸ்தாபனங்களை நிறுவுவார்களென்றும் இவ்வாஸ்ரமம் நம்புகிறது. இவ்வித எண்ணங்கள் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தன. கோகலே அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற இந்திய ஊழியர் சங்கம், தக்கண கல்விச் சங்கம், ஜெனனுமிஷன், காதட்ரால் பெண்கள் கலாசாலை முதலியவற்றை சற்று அகக்கண்முன் நிறுத்தி ஆழ்ந்து யோசிப்போமானல் அவைகள் இன்றைய உயர்நிலையிலிருக்கும் காரணம் நன்கு புலப்படும். பொதுஜன முன்னேற்றத்திற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனங்கள் அபிவிருத்தியடையாமலிருக்க எவ்விதம் இயலும். பணத்தால், புகழும் சாதாரண காரியங்களும் நடைபெறக் கூடுமென்றாலும் உணர்ச்சியுடைய அறிஞர்களாலேயே ஸ்தாபனங்களுக்கு ஜீவசக்தி கொடுக்க முடியும். நமது தாயகத்தின் துரதிர்ஷ்டவசமாக அத்தகையோரைக் காண்பதே அரிதாகிவிட்டது. ஆனல் பெண் சமூகத்தினர் புரியும் சேவைகளை எண்ணிலடங்கா. பணஉதவியால் பல கட்டிடங்களைக் கட்டலாம்; ஆனல் அவைகளை வைத்துப் பரிபாலிக்கத்தக்க அறிவுடையோர்களை ஆக்குதல் இயலுமா? முடியாது. ஆகையால் நாங்கள் பண ஆசையில்லாமல் இயக்கத்தில் ஆர்வங்கொண்டு உழைக்கத் தயாராகவுள்ள பெண்களையே விரும்பினேம். நிஷ்காம கர்மா மதாவின் முக்கிய நோக்கம் யாதெனில் பெண் சமூகத்தினர் எந்தெந்தத் துறைகளில் உதவியை நாடுகின்றனரோ அம்

மார்க்கங்களிலெல்லாம் அவ்வப்போழ்து உதவி புரிவது. நிஷ்காம கர்மா மதாவின் சட்டதிட்டங்கள் 6—12—1910 ல் சேவகர்களாகவும், சேவகிகளாகவும் சேரத்தயாராயிருந்தவர்கள் ஒருங்கே சேர்ந்து கூடிய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. எங்கள் பதினைவரில் நான்கு ஆண்களும் இதர பெண்களுமாக இருக்கின்றோம். உங்கள் அநுமதியின் பேரில் மதாவின் சில முக்கிய திட்டங்களைக் கூறுகின்றேன்.

(1) மதாவின் நோக்கங்களாவன:—

(a) சமூக சீர்திருத்தத்தில் போட்டியிட்டு தொண்டாற்ற பெண் குழுவினரைத் தயார் செய்தல்.

(b) ஒருகுறிப்பிட்ட பெண் தொண்டர்கள் சேரும்வரை ஆண் தொண்டர்களைச் சேர்த்துக்கொண்டு, பெண் தொண்டர்கள் சேரச்சேர ஏற்கனவே சேர்ந்த ஆண் தொண்டர்களை அவர்கள் இஷ்டப்படி ராஜிநாமாவை ஏற்றுக்கொண்டும் தொடர்ந்து வேலைக்கும் வைத்துக்கொள்ளுதல்.

(c) பெண்கள் பொது அறிவு அபிவிருத்தி, தர்ம காரியங்கள் முதறியவற்றில் ஈடுபடத்தக்க வழிகளில் உணவுசாலைகளுடன் பகல் பள்ளிக்கூடங்களை நடத்துதல்.

(d) மேற்குறிப்பிட்டுள்ள நோக்கங்களுடன் நடைபெறும் ஸ்தாபனங்கள் மதாவின் மூலமாகவோ அல்லது அத்தகைய மனிதர்கள் பொருள் ஆதரவுகளில் நிர்வகிக்கப் படுவனவற்றிற்கும் தகுந்த உதவி அளித்தல்.

(2) மதாவின் அங்கத்தினர்களனைவரும் கீழ்க்கண்ட பிரக்ஞைகளைச் செய்தலவசியம்:—

(a) இன்றிருந்து மதாவின் சேவைக்கே எனது வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்கின்றேன்.

(b) எனது முழுத் திறமையுடனும் நான் வேலைசெய்வதுடன் ஸ்தாபன சம்பந்தமாக நான் தொண்டாற்றுங்கால் பொது லாபங்களை இச்சியாமலிருப்பேன்.

(c) ஸ்தாபனத்தின் சட்டங்களில் சிறிதும் பிறழாது நடப்பேனென உறுதி கூறுகிறேன்.

(d) என் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் சொந்த பராமரிப்பிற்கும் பெருமிதமான வாக்குகளால் ஏற்பாடு செய்யப்படுவனவாறே நடக்கச் சித்தனுயிருக்கிறேன்.

(e) எனது சொந்த வாழ்க்கையைப் புனிதமாக மேற்கொள்வேன்.

(f) எனது வாழ்க்கையும் உடையும் மிகவும் எளிதாகவும் சாதாரணமாகவுமிருக்கும்.

(g) மத சம்பந்தமாக பிறரின் நம்பிக்கைகளில் நான் எவ்விதத்திலும் குறுக்கிடாமலிருப்பேன்.

(h) ஒருவரையும் நான் வெறுக்காதிருப்பேன்.

மஹிலா வித்யாலயம் இரண்டு முக்கிய அம்சங்களால் திகழ்கின்றது; அவையாவன:- பிரமச்சரியமும் கல்வியின் அட்டவணையும், வெகு துரிதமான எதிர்காலத்தில் நான் மிகவும் நம்பிக்கையுடனிருப்பதுடன், வளர்ச்சியுறுவதற்காக விதைக்கப்பட்ட வித்து பூர்ண சந்திரனைப் போல் நாடொறும் வளர்ச்சியடைவது திண்ணமென எண்ணுகிறேன்.

(1) ஹிந்து விதவா நிலையம், மஹிலா வித்யாலயா, நிஷ்காம மதா ஆகிய மூன்று ஸ்தாபனங்களும் ஒரே அமைப்பாகச் சேர்க்கப்பட்டன. இது ஹிந்து விதவா நிலைய சங்கத்தின் ஆதரவில் வேலை செய்துவந்தது. ஆஸ்ரமம், மஹிலா வித்யாலயம் முதலியவற்றின் பொது கலாசாலை இப்பொழுது மஹிலாஸ்ரமம் என்றழைக்கப்படுகிறது. மதாவின் அங்கத்தினர்கள் சங்கத்தின் ஜீவிய ஊழியர்களாகிவிட்டனர்.

(2) ஹிந்து விதவா நிலைய சங்கத்தின் அமைப்பு சிறிதுமாற்றப்பட்டது. ஆரம்பத்தில் கமிட்டியால் நியமனஞ் செய்யப்பட்ட சந்தா அங்கத்தினர்களின் மேற்பார்வையில் முழுவேலையும் நடைபெற்றுவந்தது. தக்காண கல்விச் சங்கம் பெர்கூஸன் கல்லூரியையும் புதிய ஆங்கிலக் கலாசாலையையும் நிர்வகித்து வருவதுபோல்,

இப்புதிய அமைப்பிலும் சங்க வேலைகளைக் கவனிக்க நான்கு வெவ்வேறு கமிட்டிகளிருக்கின்றன. முதலாவதாக ஆயுள் ஊழியர்கள், சந்தா அங்கத்தினர்களாலாக்கப்பட்ட சங்க அங்கத்தினரடங்கிய குழுவினரிருக்கின்றனர். நேர்முகமாக வேலையிலீடுபட்டிருக்கும் ஜீவிய ஊழியர்களடங்கிய நிர்வாகக் கமிட்டியு மிருக்கின்றனர். சந்தா அங்கத்தினர்களால் சம எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட்டும் அவர்களில் பாதிப் பேர்கள் போஷகர்களாலும் பாக்கிப் பேர் அநுதாபிகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கலாசாலை போர்டிற்கு மானேஜிங் கமிட்டியிலிருந்து அக்ராசனரும் உப அக்ராசனரும் ஸ்தானம் பெற்றிருந்தனர்; ஏனைய அங்கத்தினர்கள் சந்தா அங்கத்தினர்களில் தங்களுக்குள்ளேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். மூன்று ஜீவிய ஊழியர்களும் தங்கள் கமிட்டியிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(3) ஏற்கனவே சேமித்திருந்த பணமெல்லாம் கட்டிடங்களுக்காகவே செலவழிக்கப்பட்டிருந்ததால், கட்டிடங்களை விஸ்தரிப்பது பாதிக்கப்பெற்றது. ஸ்தாபனம் மேலும் வளர்ச்சியடைந்து போவதை சோதனை செய்ய இஷ்டப்படவில்லையாதலால், முயற்சிகள் செய்யப்பட வேண்டியபணத்தைப் பார்ப்பதே மிக அரிதாகி நாங்கள் மீண்டும் கஷ்டத்தை அநுபவித்தோம். தற்சமயம் ரூ. 1,10,000 பெறுமானமுள்ள கட்டிடங்களுடையவராயிருக்கின்றோம்.

(4) மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. 200 பெண்களடங்கிய ஒரு தனி விடுதியுடன் ஒரு கலாசாலை இப்பொழுது நடைபெற்று வருகிறது. சங்கத்தாரால் ஆதரவளிக்கப்பட்ட ஐம்பது பேர் உள்பட அவர்களில் பாதிப் பேர் விதவைகளாகவே யிருந்தனர்.

(5) அப்பள்ளிக்கூடம் இப்பொழுது ஓர் உயர்தரக் கலாசாலையாக விளங்குகிறது. 1916 மார்ச் மாதத்தில் நடைபெற விருக்கும் மெட்ரிகுலேஷன் பரிக்ஷைக்கு முதல் தொகுதி பெண்கள் அனுப்பவிருக்கின்றனர்.

(6) ஊழியர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. பம்பாய் சர்வகலாசாலையில் M. A. பரீக்ஷை தேறிய முதல் ஹிந்து பெண்மணியான மிஸ். கிருஷ்ணுபாய் தாகூர் அவர்கள் சங்கத்தின் வேண்டுகோட் கிணங்கி ஒருவருட சேவை செய்தார். முதல் வருடம் முடிந்ததும், மீண்டும் ஒரு வருட சேவை யாற்றவும் அவர் வாக்களித்தார். அவர் கலாசாலையின் மேற்பார்வையாளராக (Superintendant) இருந்தார். பெர்கூஸன் கல்லூரியிலிருந்து நான் ரிடையர் ஆனதிலிருந்து இந்த ஸ்தாபனத்திற்கே எனது வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்து தொண்டாற்றி வருகிறேன். திரு. H. R. டிவெகார் அவர்கள் அரசாங்க இந்திய அறிஞர்களில் (Government of India Scholar) ஒரு வாரகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியையும் உதறித் தள்ளிச் சங்கத்தின் ஜீவிய ஊழியராகச் சேர்ந்தார். சென்ற 13 வருஷ காலமாக இந்த ஸ்தாபனத்தில் உழைத்துவரும் ஸ்ரீமதி பார்வதிபாய் அதெவேலின் புத்திரன் திரு. N. M. அதெவேல் இன்னும் சில மாதங்களில் இங்குவந்து சேருவாரென எதிர்பார்க்கப்படுகிறது. அவர் தற்போது பெர்கூஸன் கல்லூரியில் டிமான்ஸ் டிரேட்டர் வேலை பார்த்துவருவதோடு M. A. பரீக்ஷைக்கும் படித்துக்கொண்டிருக்கிறார். அவர் நிச்சயமாக ஏப்ரல் மாதத்தில் வந்து சேர்வாரென எதிர்பார்க்கப்படுகிறது. மேற் சொன்ன அபிவிருத்திகளிலிருந்து இந்த வேலையானது எவ்வாறு முன்னேறி வருகிறதென்று விளங்கும். அதி முக்கியமான குறை இந்த ஸ்தாபனத்தை விரிவுபடுத்துவதற்கு மட்டுமல்ல. தினசரி ஏற்படக்கூடிய சாதாரண செலவுகளுக்கும் போதுமான நிதியில்லாததுதான். இந்த ஸ்தாபனம் இந்த நெருக்கடியான காலத்தில் யாதொரு விதமான குறைவுமின்றி தக்கபலத்துடன் அபிவிருத்தியடைய வேண்டுமென நான் விரும்புகிறேன்.

விதவையர்க்கு - -

- - விடுதலை நல்குவீர்!

விதவைகளின் துயர்.

by S. Sathiamoorthy

எண்ணரிய பிறவிகளில் மானிடப் பிறவியே யாதினும் சிறந்ததென்பது நமது ஹிந்து தர்மசாஸ்திரங்களின் துணிபு. எனெனில் மனிதனே மற்றெல்லாப் பிராணிகளைப் போலன்றி சப்த, ஸ்பர்ஸ, ரூப, ரச, கந்தமென்ற ஐந்தறிவுகளுடன் ஆறாவதாகிய பகுத்தறிவையும் பெற்றிருப்பதால் தீமையகற்றி நல்லன புரிந்து நற்கதியடையும் வல்லமை பெற்றிருக்கின்றான். இப்பிறவியிலேயே மனிதன் கடவுளைத் தரிசிக்கலாம்; பூர்வ ஜன்மத்திற் செய்த தீவினைகட்குப் பிராயச்சித்தம் செய்துகொண்டு பரமபதத்தை யடையலாம். ஆனால் இது உண்மைதானா வென்று நம் ஹிந்து சகோதரர்களைக் கேட்கின்றேன். இதைப் பொய்யென்று ஒருக்காலும் நீங்கள் கூறமாட்டீர்கள். ஆனால் பால்யத்திலேயே விவாகமாகி வைதவ்யத்தின் துன்பத்திற் காளான ஓர் ஹிந்து ஸ்திரீயினிடம் கேட்டால் அவள் என்ன சொல்வாளென்று நினைக்கின்றீர்கள்? ஜாதியாசாரத்தின் பெயரால் சிறுவயதிலேயே விவாகமாகித் தன் கணவனையிழந்து இரவு பகல் நித்திரையோ அமைதியோ சிறிதுமின்றி அல்லலுற்று வருந்தும் ஓர் பெண்பேதையின் இதயத்திற் புகுந்து பார்த்தால், அவளுடைய இதயம் வைதவ்ய மென்ற அக்னியால் வெந்து சாம்பராகிக் கொண்டிருப்பது தெரியவரும். அவளுடைய இளமை யுணர்ச்சிகளையும், அவளுடைய எண்ணிறந்த ஆசைகளையும், உயர்ந்த எண்ணங்களையும்—ஆடவர்களின் சுயநலத்திற்காக வென்றே வகுக்கப்பட்ட ஜாதி ஆசாரங்களும் கொடிய பழக்கவழக்கங்களும் சிதறவடித்து விட்டன வென்பது புலனாகும். அவள் வைதவ்யமென்ற யந்திரத்தில் அகப்பட்டுக் கொண்டு சக்கையாகப் பிழியப்படுகின்றாள். இம்மட்டோ! அவள் வெளிவிடும் கனல் ஸ்வாசத்தில் ஹிந்து ஜாதியே வெந்து நீறுகின்றது. இம்மனித சரீரத்தினால் சுகத்தையடைவது அவள் பொருட்டு அரிதாகின்றது. எனவே அவள் பகவானிடம்,

"ஹேப்ரபோ! எனக்கு இம்மனிதப் பிறவியை மறுபடியும் வழங்கவேண்டாம்; ஆடவர்களின் போலி ஆசாரங்களை யனுஷ்

டிக்குமாறு என்னைத் துன்பத்திற்குள்ளாக்காது மிருகமாகவோ அல்லது பறவையாகவோ எனக்கு பிறவியருளும்; அப்படியன்றி எனக்கு மானிடப் பிறவியே யருளுவீரேல் என்னைப் பெண்ணுகப் பிறப்பிக்கவேண்டாம்; அதுவும் சாத்யமில்லை, என்னைப் பெண்ணுகப் பிறப்பிப்பதே உமதிச்சையானுல், ஹிந்துக்கள் வீட்டில் என்னைப் புகுத்தவேண்டாம்" என்று பிரார்த்திக்கிருள்.

இதனுல் ஹிந்து விதவைகளின் பொருட்டு மானிடப் பிறவி துன்பத்தையளிக்க வல்லதாகவே யிருக்கின்றதென்பதை யாரே மறுக்கமுடியும்? இத்தகைய நரகவேதனையை யளிக்கவல்ல பிறவியை மறுபடியடைய அவர்கள் சிறிதும் விரும்பவில்லை. உண்மையில் ஹிந்துவிதவைகளின் துயரைத் தீர்க்க ஆடவர்கள் எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ள வில்லை. சைமன் கமிஷனை யேற்படுத்தியதற்காகவும் புதிய அரசியல் சீர்திருத்தம் வழங்கியதற்காகவும் நம் ஹிந்து சகோதரர்கள் ஆங்கிலேயர்களைத் தூற்றுகின்றுர்கள். ஆம் இந்திய ஆட்சிமுறையை நிர்ணயிக்க வேண்டியவர்கள் இந்தியர்களே; சைமன் கமிஷனில் இந்தியர்களைச் சேர்த்திருக்க வேண்டியதும் நியாயமே; அங்ஙனமிருந்தும் இவ்விஷயங்களில் இந்தியர்கள் சிறிதும் மதிக்கப்பட வில்லை. இது ஏன்?

ஆங்கிலேயர்களிடம் இவ்விதம் வாதுபுரியும் ஹிந்து சகோதரர்களிடம் ஒன்றுகேட்க விரும்புகின்றேன். இவர்கள் தம் சகோதரிகளின் வைதவ்யத் துயரை யொழிப்பதில் அவர்களுடைய அபிப்பிராயங்களைச் சிறிதும் அறிந்துகொள்ளாது அலக்ஷியம் செய்துவருகையில் அரசாங்கத்தார் தம்மை மதிக்கவில்லையென்று கூறைகூற இவர்களுக்கு என்ன அதிகாரமிருக்கின்றது? இவர்கள் ஆங்கிலேயர்களால் அலக்ஷியம் செய்யப்படாமலிருக்க வேண்டுமாயின் முதலில் தம்மைச் சார்ந்துள்ள விதவைகளையும், தீண்டாதாரெனப்படும் ஹரிஜனங்களையும் சமநோக்குடன் கவனிக்க முற்படவேண்டும்.

சமீபத்திற்ருன் ஹைதராபாத்தில் 16 வயதிற்கு மேற்படாத எந்த ஹிந்து விதவையும் புனர் விவாகம் செய்துகொள்ளலாமென்று சட்டம் இயற்றப்பட்டிருக்கின்றது. புருஷ வர்க்கம் "16 வயது" என நிர்ணயிக்காவிடில் குடிமுழுகிப் போய்விடுமா

வென்று கேட்கிறேன். இவ்வாறு நிர்ணயிப்பதில் ஸ்திரீவர்க்கத்தின் சம்மதத்தைக் கேட்டார்களா? கேட்டாலும் இவ்விதமான நிபந்தனையை ஒப்புக் கொள்வார்களா? ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார்கள். ஆகையால் ஹிந்து ஆடவர்கள் தம் சமூகத்தின் நலனைக் கோருவார்களாயின், அவர்கள் தம் சகோதரிகட்குச் சுதந்திரமும் சமத்துவமும் அளிக்கவேண்டும்; அவர்கள் தம் சகோதரிகட்குச் சுதந்திரமும் சமத்துவமும் அளிக்கவேண்டும்; அவர்கள் மானிடப் பிறவிக்கேற்ப உயர்ந்த குணங்களையும் பெண்மையின் இன்ப நுகர்ச்சியையும் இடையூறின்றி யனுபவிக்க சந்தர்ப்பமளித்தல் வேண்டும். இன்றேல் இவ்வபலைகளின் இதயத்தே யெழுந் துன்பத் தீ ஹிந்து ஜாதியைப் பஸ்மீகரம் செய்துவிடும்; போலியாசாரங்களாலும் வைதவ்யக் கொடுமையாலும் பாதிக்கப்பட்ட இவ்வபலைகளின் சாபத்தால் சமூகமுன்னேற்றத்திற் காகவும், சுதந்திர போராட்டத்திற்காகவும், செய்யப்படும் எல்லா முயற்சிகளும் பாழ்படும்; ஹிந்து வம்சம் அடியோடு மறைந்துவிடும்; முடிவில் இத்தகைய பழியும் பாபமும் ஹிந்து வகுப்பைச் சேர்ந்த ஆடவர்களைச் சாரும். விழித்தெழுங்கள்!

மணமகன் தேவை.

1. விஸ்வ பிராமண வகுப்பு. வயதுசுமார் 21; சொற்பமான தமிழ்படிப்பு. விஸ்கர்ம வகுப்பில் மாதம் 40 ரூபாய்க்குக் குறையாத வரும்படியுள்ள மணமகன் தேவை.

2. வேளாள வகுப்பு. வயது 18; தமிழ்படிப்பு. சங்கீதப்பயிற்சி, தையல், பூ வேலை, கை ராட்டின நூல் நூற்றல் முதலிய கைத் தொழில் பயிற்சி உண்டு. உயர் ஜாதி ஹிந்தி வகுப்பில் தகுந்த செல்வ நிலையுள்ள மணமகன் தேவை.

காரியதரிசி,
மாதர் மறுமண சகாய சங்கம்,
காரைக்குடி.

:: நிகழ்ச்சிகள் ::

விதவா விவாகக் கணக்கு

1938-ஆம் ஜூலை மீ

ஜாதி வாரியாக:—

பிராமணர்	78
க்ஷத்திரியர்	29
அரோடர்	44
அகர்வாலர்	58
காயஸ்தர்	36
ராஜபுத்திரர்	70
மொத்தம்	315

மாகாண வாரியாக:—

பஞ்சாப்	110
ஐக்யமாகாணம்	32
மத்திய மாகாணம்	34
பம்பாய்	7
வங்காளம்	57
மத்ய இந்தியா	20
மதராஸ்	25
பீஹார் ஒரிஸ்ஸா	30
மொத்தம்	315

அகர்வாலர் வகுப்பில் விதவா விவாகம்

சென்ற ஜூன்-மீ 26உ ஞாயிற்றுக்கிழமையன்று, இவ் வியக்கத்திற்கு ஜென்ம விரோதிகளும் சுய நல வாதிகளும் நிரம்பியிருக்கும் "கோதியா" நகரில் வெகு உற்சாகத்துடன் விதவாமணமகள் ஸ்ரீமதி நர்மதா தேவிக்கும் அகர்வாலர் வகுப்பைச் சேர்ந்த ஸ்ரீமான் மதன் லாலவர்களுக்கும் விவாகம் சிறப்பாக நடந்தேறியது. இவ்விவாகத்திற்கு அகர்வாலர் வகுப்பையும் ராஜஸ்தானியர் வகுப்பையும் சேர்ந்த அநேக பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். மகாத்மா காந்தியடிகள், ஸ்ரீமான் ஜமுனலால் பஜாஜ் அவர்கள், முதலிய சுமார் 100 பிரமுகர்கள் தம்பதிகளை ஆசீர்வதித்துத் தந்திகளும் வாழ்த்துச் செய்திகளும் அனுப்பியிருந்தனர்.

ஸ்வாமி, பிருஹ்மானந்தரவர்கள் விவாக சம்ஸ்காரங்களை வைதிக முறையில் நடத்தி வைத்தார். விவாக மண்டபத்தில் சுமார் 3000 ஸ்திரீ புருஷர்கள் நிரம்பியிருந்தனர். விவாக முகூர்த்தம் நடந்தேறியதும், யானை, ஒட்டகம், குதிரைகள், மோட்டார்கள் இவற்றுடன் ஒரு பெரும் ஊர்வலம் கிளம்பிற்று. ஊர்வலத்தின் மத்தியில் ஆங்காங்கு மூவர்ணக் கொடிகள் பறந்து காட்சியளித்தன. தம்பதிகள் அமர்ந்திருந்த மோட்டார் வண்டி புஷ்பங்களாலும் மாலைகளாலும் கண்ணைக் கவரத்தக்க முறையில் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. நகரின் முக்ய வீதியை யடைந்ததும் ஊர்வலத்தில் சுமார் 6000 முதல் 7000 ஜனங்கள் வரை கலந்து கொண்டனர். அகர்வாலர் சமூக இதிகாசத்திலேயே இவ் விவாகம் இதுவரை கண்டிராததும் மிகுந்த பிரதானத்துவம் வாய்ந்ததுமான காட்சியாயிருந்தது. ஊர்வலம் நகரத்தின் முக்ய வீதிகளைக் கடந்து ஆஸாத்கஞ்சை யடைந்தது. வழியெங்கும் பல பிரமுகர்களும் சீர்திருத்த வாதிகளும், உயர்குல

ஸ்திரீகளும் தம்பதிகட்கு பூச்செண்டுகளளித்தும், மாலைகளணிவித்தும், பரிசுகள் வழங்கியும் ஆசீர்வதித்தார்கள். இங்ஙனம் கௌரவித்தவர்களிற் பெரும்பாலானவர்கள் அகர்வாலர் வகுப்பையும் ராஜஸ்தானியர் வகுப்பையும் சேர்ந்தவர்களே யென்பது குறிப்பிடத்தக்கது.

இந்நகரில் அகர்வாலர் சமுகத்தில் இதுவே முதன் முதலாய் நடைபெறும் விதவா விவாகமாகும். விரோதிகள் இதைத் தடுக்க பகிரதப் பிரயத்தனம் செய்தும் பயன்படவில்லை.

மணமகள் . ஸ்ரீமதி நர்மதா தேவிக்கு வயது 22.

மணமகன் ஸ்ரீமான் மதன்லாலவர்களுக்கு வயது 28 ஆகும். இவர் ஓர் பெரிய சமூக சீர்திருத்தவாதியும் காங்கிரஸ் பக்தருமாவர். சென்ற சத்தியாக்ரஹப் போரில் மும்முறை சிறை வாசம் செய்திருக்கின்றார்.

அகர்வால் ஜாதியில் விதவா விவாகம்

வைசிய அகர்வாலர் வகுப்பைச் சேர்ந்தவள் ஸ்ரீமதி தாகாபாய். வயது 22. இவள் தன் 10வது வயதிலேயே பதியையிழந்து விதவையானாள். பருவமடைந்து 6 அல்லது 7 வருஷங்கள் வரை மிகப் புனிதமான வாழ்க்கை நடத்திவந்தாள். ஜாதி, தர்மம், மதம், கற்பு இவற்றிற்கு எள்ளளவும் பங்கம் நேரிடாமல் நடந்துவந்தாள். ஹிந்து ஆடவர்கள் எத்தனை ஸ்திரீகளை வேண்டுமாயினும் வைத்துக் கொள்கிறார்கள்; 50,60 வயதுள்ள கிழவர்கள் 10,15 வயதுள்ள இளங் கன்னிகைகளை மணந்து அவர்களைப் பிற்காலத்தில் விதவைகளாயும் வேசியர்களாயும் பரிதவிக்கும்படி விடுவதில் சற்றும் பின்னடைகின்றார்களில்லை; தமது இத்தகைய நிந்தைக்குரிய செயல்கள் தம் மக்களிடையேயும் யுவர்களிடையேயும் எவ்வளவு தூரம் பாதிக்கக்கூடியதென உணர்வதில்லை. சுற்றத்தாரில் கண்யமானவர்கள் கூட இத்தகைய விவாகங்களிற் கலந்து கொண்டு ஆனந்தமனுபவிக்கின்றனர். ஆனால் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் விதவைகள் சார்பாக இரக்கமென்பது மருந்துக்கும் அவர்களிட மில்லை—இதுவே ஸ்ரீமதி தாகாபாய் அனுபவத்தில் கண்டும் கேட்டும் வந்திருக்கின்றாள்.

ஓர் நாள் இவள் தன் பெற்றோரிடம் "காலம் மிகவும் மாறிவிட்டது; இனி நான் வைதவ்ய வாழ்க்கையைக்கடைப்பிடிக்க முடியாது. நீங்களே நம் ஜாதியைச் சேர்ந்த, தாரமிழந்த ஆடவரொருவருக்கு என்னை மணம் செய்துவையுங்கள். அதனால் ஜாதி, தர்மம், கௌரவம் இவற்றிற்குப் பங்கம் ஏற்படாது. ஏனெனில் இப்பொழுதோ எல்லா சமஸ்தானங்களும் விதவா விவாகத்தை அனுமதித்துச் சட்டங்களியற்றியிருக்கின்றன. உங்களையாரும் ஜாதிப்பிரஷ்டம் செய்யவியலாது; உங்கள் புத்திரியின் மீது இரக்கம் காட்டுங்கள்" என்று கேட்டுக் கொண்டாள்.

எவ்வாறு சர்ப்பத்திற்குப் பால் வார்த்தாலும் விஷத்தையே கக்கும் தன்மையுடையதோ அவ்வாறே தாய்தந்தையர் சீற்றமடைந்து புத்திரியென்றும் பாராமல் தகாத வசைச்சொற்களை யெல்லாம் பிரயோகித்து வீட்டை விட்டுத் துரத்திவிட்டனர். அந்தோ! பரிதாபம்! ஹிந்து ஜாதியின் கொடுமைதானென்னே! தாய்தந்தையருக்குப் புத்திரியின் மேல் எவ்வளவு அன்பு!—தம் பெண் தீயில் குதித்து உயிர்விடலாம்—ஓர் மகம்மதியனிடம் ஓடிப்போய் விடலாம்—திரைமறைவில் ரகசியமாய் விபசாரம் நடத்தலாம்—பிச்சையெடுக்கலாம்— ஆனால் கிரமமான முறையில் ஓர் ஆடவனை மணந்துகொண்டு வீட்டிலிருப்பதற்கு இடமில்லை! குடி அடியோடு மூழ்கிவிடும்!

அன்னை தந்தையரின் கொடுமையினின்றும் தப்பி உஜ்ஜைனியிலுள்ள சர். கங்காராம் விதவாபவனத்தைச் சரணடைந்தாள். திக்கற்ற அபலை இப் பெண்மணி தன் நடத்தையால் விதவாபவனத்திலுள்ள மற்ற ஸ்திரீகளுக்கு வழி காட்டியா யிருந்துவந்தாள்.

சென்ற 1938 ஜுலை 5-உ யன்று உஜ்ஜைனி, ஸர். கங்காராம் விதவாபவனத்தில் ஷை ஸ்ரீமதி தாகாபாய்க்கும், அதே வகுப்பைச் சேர்ந்த இந்தூரிலுள்ள ஸ்ரீமான் கஞ்சேதிலாலவர்களுக்கும் திருமணம் முறைப்படி நடந்தேறியது. பெண்மணியின் விருத்தாந்தம் நன்கு பரவியிருந்தபடியால் விவாக மண்டபத்தில் எள்விழ இடமில்லாதபடி அவ்வளவு கூட்டம் கூடியிருந்தது. முடிவில் ஸ்ரீமான் தாகேசாகிப் அவர்கள் இத்தகைய துணிகரமான சமூக சீர்திருத்தக் கார்யத்தி லீடுபட்ட தம்பதிகட்கு வந்தனமளித்து விட்டு ஆண்டு கூடியிருந்த விதவா யுவதிகளுக்கு ஸ்ரீமதி தாகாபாயின் உதாரணத்தை எடுத்துக்காட்டி உருக்கமானதோர் பிரசங்கம் செய்தார்.

அடுத்தபடியாக விதவாபவனத்தின் சூப்பிரண்டு பண்டித பூதேவ சர்மா அவர்கள், பால்ய விவாகத்தாலேற்படும் தீமைகளையும், கஷ்டத்தையும், விவாக மென்பதென்ன வென்றேயறிந்து கொள்ளக் கூடாதவயதில் தம் மக்களுக்குத் திருமணத்தைச் செய்து வைத்துவிட்டுத் தமக்கும் தம் சந்ததிகளுக்கும் அழியா நரகத்தைத் தேடிக்கொள்கின்றன ரென்பதையும் விளக்கி ஓர் அரிய பிரசங்கம் புரிந்தார்.

கடைசியாகப் பண்டித விஷ்ணு தயாளு அவர்கள் "ஹிந்து ஜாதி நாளுக்கு நாள் க்ஷீண தசை யடைந்துவருகின்றது" என்ற தலைப்பில் ஓர் பிரசங்கம் நிகழ்த்தினர். பின்பு பக்திரசமான கீர்த்தனைகள் பாடப்பெற்றன. பாண்டு வாத்யங்கள் கோஷித்தன. கூடியிருந்தவர்களுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பெற்றது. உஜ்ஜைன் வாசிகளிடையே இவ்விவாகம் பெருத்த மாறுதலை விளைவித்தது.

ரீவா சமஸ்தானத்தில் விதவா ஆஸ்ரமம்

ஸ்ரீமான் மஹாராஜா சாகிப் பகதூரவர்கள் தம் சமஸ்தானத்துப்

பிரஜைகளின் சமூக முன்னேற்ற சம்பந்தமாக அநேக துறைகளில் கவனஞ் செலுத்தி சிரத்தையுடன் நடவடிக்கைகள் எடுத்து வந்திருக்கின்றார். சமீபத்தில் விதவைகளின் கூக்குரலைக் கேட்டு அவர்களுடைய நிலைமையைச் சீர்திருத்தும் நல்லெண்ணத்துடன் தம் ராஜ்யத்தில் விதவா ஆஸ்ரம் என்று ஒன்று ஸ்தாபிக்க ஓர் பிரகடனம் செய்திருக்கின்றார்.

லூடியானவில் விதவா விவாகம்

1938 ஜூலை 22உ இரவு லாலா கைண்டாராம் சராப் அவர்களுடைய 20 வயதுள்ள விதவா புத்ரி ஸ்ரீமதி தயாவந்திக்கும், ஸ்ரீமான் வீரசந்த் என்பவருக்கும் விவாகம் நடந்தது. விவாகம் புராண பண்டிதர்களால் நடத்திவைக்கப்பட்டது. விவாக கோஷ்டியில் 30 பேர் வந்திருந்தார்கள்.

கற்பழிக்கும் கசடர்களுக்கு சவுக்கடி

ஸ்திரீ சம்ரக்ஷண சங்கத்தின் கிளை யொன்று ஹௌராவில் மாடர்ன் ரெவ்யூ ஆசிரியர் ஸ்ரீராமானந்த சாட்டர்ஜியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவர் பேசுகையில், ஸ்திரீகளைக் கற்பழிப்பது, பலவந்தப் படுத்துவது போன்ற குற்றங்களுக்கு கட்டாயமாக சவுக்கடி கொடுக்க கடுமையான சட்ட மியற்றவேண்டு மென வற்புறுத்தினர்.

"காதல் இன்றேல் சாதல்"

ஆக்ஸ்போர்ட்டில் ஒரு தையல்காரனின் புதல்வியான ஸ்ரீமதி ஜாய்ஸ் பிளங்கோ என்பவள் மீது மலாய்நாட்டு இளவரசரான மகமது எனும் வாலிபர் காதல் கொண்டு, அவளுக்காகத் தான் எல்லாவற்றையும் தியாகம் செய்துவிடத் தயார் என்று சொல்லுகிறார். இளவாசருக்கு வயது 21; மலாயைச் சேர்ந்த டிரங்கானு சுல்தானின் சகோதரர். "அவள் இல்லாமல் நான் தனியே மலாய் திரும்புவதைவிட பட்டினிகிடந்து சாவேன் எங்கள் விவகாரத்தை யாரும் தடுக்க முடியாது," என்று இளவரசர் கூறுகிறார். அவருக்கு இப்போது சுல்தான் பணம் அனுப்புவதை நிறுத்திவிட்டு, உடனே மலாய்க்குத் திரும்ப வேண்டுமென கண்டிப்பாக உத்திரவிட்டிருக்கிறார்.

ஸ்திரீ டையரெக்டர்கள்

தஞ்சை பிலிம் லீகின் வருட விழாவின்போது திரு வி. ராமலிங்கம் பேசியதாவது:—

சமூக வாழ்க்கையில் இருந்து வரும் குடும்ப பெண்மணிகள் நடிகர்களாகச் சேருவதற்கு இது சரியான காலமல்ல. அநேகம் ஸ்டுடியோக்களில் சிபார்சுகள் கேட்கப் படுகிறது. தவிர, இங்குள்ள ஸ்டுடியோக்களில் ஒன்றிலாவது ஸ்திரீ டையரெக்டர் கிடையாது. ஸ்திரீ டையரெக்டர்கள் இருக்கவேண்டும். ஸ்திரீ டையரெக்டர்கள் வேண்டுமென கிளர்ச்சிசெய்ய வேண்டுவதும் அவசியம். சினிமாக்களில் ஒழுக்கம் ஏற்பட இது தான் சரியான வழியுமாகும்.

சமூக சீர்திருத்தப் புத்தகங்கள்.

"மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு சகாயம்.

கைம்பெண்ணின் கண்ணீர்.

இது ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் அவர்களால் எழுதப்பட்டு மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விதவைப் பெண்கள் படுந்துயரமும் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரமும் தெளிவு படக் கூறப்பட்டுள்ளன. விதவா விவாகம் சுருதி—யுக்தி— அனுபவபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரை முதலாவது பரிசு பெற்றதாகும். விலை அணா ஒன்று. தபாற் செலவு வேறு.

மான நஷ்ட வழக்கு.

இது பெண்ணுக்குப் பணம் வாங்கிச் செய்ததற்காக பெண்ணின் தம்பி மைனர், மேஜரான பிறகு தன் குடும்பத்திற்கு அவமானம் வந்து விட்டதென்று கோர்ட்டில் வழக்கிட்டு நீதிபெற்றதாக எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கோர்ட் நடவடிக்கையும் மலைவிழுங்கி முத்தப்ப செட்டியாரின் விசாரணை விவரங்களும் தீர்ப்பும் படிப்பவர்க்கு வெகு உற்சாக மூட்டக் கூடியன. விலை அணா ஒன்று. தபாற் செலவு வேறு.

சொர்னவல்லி.

இதில் அடுத்தாள் வேலையின் அவஸ்தை, பிரிந்த காதலர்களின் பெருந் துன்பம், தீர்த்த யாத்திரைக்குப் பெண்கள் சென்று படும்பாடு, பச்சிளம் பெண்கள் விதவையாக்கப்படும்கஷ்டங்கள் முதலிய பகுதிகளும், விதவைப் பெண் வைக்கும் ஒப்பாரியும் படிப்பவர் உள்ளத்தை உருக்கிவிடுவது திண்ணம். உபந்யாசங்களும் மேற்கோள்களும் சந்தர்ப்பத்துக்கேற்ற இனிய பாட்டுக்களும் நிறைந்து விளங்கும். எளிய அழகான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை ரூ. 1—0—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—12—0. தபாற் செலவு வேறு.

அமிர்தவல்லி மாலை.

இது நகரத்தார் பெருமையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விளக்குகிறது. பால்யப் பெண்களை மணம் செய்வதும் அதை விதவையாக்கிக் கண்ணீர் வடிப்பதும் எவ்வளவு கொடுமை யென்பதையும், அதனாலேற்படும் இன்னல்களையும் படிப்பவர் மனத்தில் பசுமாத்து ஆணிபோல் பதியச் செய்யும்படி அமைந்துள்ளது. யாவரும் எளிதில் பாடக்கூடிய இனிமையான அம்மானைப் பாட்டில் பாடப்பட்டிருக்கிறது. விலை 0—4—0. 'மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—3—0. தபாற் செலவு வேறு

மானேஜர், மாதர் மறுமணம் ஆபீஸ், காரைக்குடி.

REGD. No. M. 3603.

சிறந்த புத்தகங்கள்.

மாதர் மறுமணப் பாடல் திரட்டு.

இது ஒரு சிறந்தபாடல் புத்தகம். இதில் 27-பாடல்கள் அடங்கியுள்ளன. இலக்கிய பாடல்களும், புதுவகையான மெட்டுப் பாடல்களும் நிறைந்திருக்கின்றன. 64-பக்கமுள்ள இப்புத்தகத்தின் விலை இரண்டணுதான். தபாற்கூலி வேறு.

ஜீவகாருண்யத் திருக்குறள்.

"வள்ளுவர் பாட்டின் வள முரைக்கின் வாய்மடுக்கும்" என்று புகழப்படும் திருக்குறளிலிருந்து ஜீவகாருண்ய சம்பந்தமான 20 குறளைப் பொறுக்கிப் பெரிய எழுத்தில் பொழிப்புரையுடன் அச்சிடப் பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர் பயில்வதற்கு மிக இன்றியமையாதது. விலை அணு அரை. மொத்தமாக வாங்கினுல் விலை சகாயமாகத் தரப்படும். தபாற்கூலி வேறு.

மாதர் மறுமணம்.

இப்பெயர் கொண்ட அழகிய புத்தகம் மகிபாலன்பட்டி திருவாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் இயற்றப் பெற்றது. அழகான நடை. நகரத்தார் சமூகத்திற்கு மாதர் மறுமணம் எவ்வளவு அவசியமென்பதற்குக் காரணங்களைப் பசுமரத்தாணியெனப் பதியும்படி எழுதியிருக்கிருர்கள். உதாரணமாகக் கூறப்படும் ஏழு கதைகள் வியக்கத்தக்கனவாகும். அழகான புத்தகம் விலை 0—4—0 "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு 0—3—0 தபாற்சிலவு வேறு.

காசில்லாமல் உபதேசம்.

பஞ்சாட்சர உபதேசம் செய்வதற்கு ஆடம்பரமும் அனுவசியமான தடபுடலும் வேண்டியதில்லை யென்பதற்கு வேண்டிய காரணங்கள் இதில் விளக்கப்பட்டிருக்கிறது. அதோடு தண்ணீர் மந்திரமும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. விலை அணு ஒன்று. தபாற் கூலி வேறு.

மாதர் மறுமணம் பென்ஸில்.

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கியம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ள அழகான பென்சில். நல்ல நிறம். சுகமாக எழுதக்கூடியது. இந்தியாவில் செய்யப் பெற்றது.

விலை பேன்சில் 1-க்கு	0—0—6
டஜன் 1-க்கு	0—5—0
குரோஸ் 1-க்கு	3—6—0

தபாற்செலவு வேறு.

Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.
Editor: M. Maragathavalli.